www.panmugam.com

# பன்முகம்

.com

மார்ச் - 2026 மலர்-2 இதழ்-3



24
மணிநேரமும்
கேளுங்கள்
தமிழ்நாடு
fm.com

விருப்ப சந்தா
ரூ.50 செலுத்த
ஸ்கேன் செய்யவும்
MS PADMA MEDIA HOUSE

## உலகிற்கு தன்னிறைவு கற்றுக்கொடுத்த

# கோவில்கள்

www.panmugam.com
# பன்முகம்
மலர்-1 இதழ்-12 .com




## உங்கள் படைப்புகளை அனுப்பிவிட்டீர்களா?

## மார்ச் 2026

## பன்முகம் பல்சுவை மாத இதழ்

| | | |
|---|---|---|
| கவிதைகள் | 15 வரிகளுக்கு மிகாமல் | சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ரூ100 பரிசு |
| சிறுகதைகள் | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | சிறந்த கதைக்கு ரூ500 பரிசு. |
| கேள்விகள் | எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். | சிறந்த கேள்விக்கு ரூ100 பரிசு. |
| கட்டுரை | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| திரை அனுபவம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| நூல் அறிமுகம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |

அனுப்பவேண்டிய முகவரி
tamilnaduepaper@gmail.com

கடைசிநாள்
**20.03.2026**

தொடர்புக்கு
**9337501889**

**படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயரையும், அலைபேசி எண்ணையும் தவறாமல் படைப்புக்குக் கீழ் குறிப்பிடவும்**

**அச்சு இதழ் ஆண்டு சந்தா Rs.800**
**மின்னிதழ் ஆண்டு சந்தா Rs.300**
**G-pay 9337501889**

# சிறுவனின் நம்பிக்கையும் ஒரு ரூபாய் கடவுளும்



எட்டு வயது சிறுவன், கடைவீதியில் உள்ள கடைக்காரரிடம் ஒரு ரூபாய் நாணயத்தை காட்டி, உங்கள் கடையில் இறைவன் இருந்தால் ஒரு ரூபாய்க்கு கிடைப்பாரா ?என்று கேட்டான் .

சிறுவனின் கையில் இருந்த நாணயத்தை தட்டிவிட்ட கடைக்காரர், சிறுவனை அங்கிருந்து துரத்திவிட்டார். சிறுவனும் அந்த நாணயத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு கடையாக சென்று ஒரு ரூபாய்க்கு இறைவனை வேண்டுமென்று கேட்டுள்ளான்.

பல கடைக்காரர்கள் அவனை விரட்டி விட்டாலும் மனம் தளராத சிறுவன், அங்கிருந்த ஒரு பெரிய கடைக்கு சென்று ,கடை உரிமையாளரிடம் உங்கள் கடையில் இறைவன் இருந்தால் ஒரு ரூபாய்க்கு வேண்டுமென்று கேட்டு உள்ளான்.

அதற்கு அந்த கடைக்காரர் மிகுந்த கோபமுற்று இழுத்து கொண்டு போய் வெளியே தள்ளி விட்டார். அவன் வந்து கொண்டிருந்த ஒரு விலையுயர்ந்த சொகுசு காரின் முன்னே சென்று விழுந்தான்.

அந்த கார் நிறுத்தப்பட்டது. நல்ல வேளை அடியேதும் படவில்லை. அந்த காரில் இருந்து இறங்கிய அந்த பெரியவர் அந்த சிறுவனை பார்த்து என்ன ஆயிற்று? என்று கேட்டார்..

அந்த சிறுவன் நடந்ததை, கூறி பின்னர் அவரிடமே, தன்னுடைய ஒரு ரூபாய் நாணயத்தை காட்டி,, உங்களிடம் இறைவன் இருந்தால் இந்த ஒரு ரூபாயை வைத்து கொண்டு எனக்கு கொடுக்க முடியுமா? என்று கேட்டான்.




அதற்கு அந்த பெரியவர், ஒரு ரூபாய்க்கு இறைவனை வாங்கிவிட்டு ,அந்த இறைவனை வைத்து நீ என்ன செய்யப் போகிறாய் ?என்று கேட்டுள்ளார்.

அதற்கு சிறுவன் எனக்கு எல்லாமே என் தாய் தான். சாப்பாடு ஊட்டுவது முதல் ,தாலாட்டு பாடி என்னை தூங்க வைப்பது வரை! என் தாய் தான். தற்போது என் தாய் உடல் நலம் இல்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்கள் உன் தாயை இறைவன் தான் காப்பாற்றுவார்! என்று கூறி விட்டனர். அதனால்தான் என்னிடம் உள்ள ஒரு ரூபாய்க்கு இறைவன் கிடைப்பாரா என்று தேடிக் கொண்டிருக்கிறேன் !என்று கூறினான்..

அதற்கு அந்த பெரியவர் உனக்கு ஒரு ரூபாய்க்கு இறைவனைத் தானே வேண்டும்,? நான் தருகிறேன்! என்று கூறி, ஒரு கடிதம் எழுதி, அதை ஒரு உறையுள் போட்டு கொடுத்து, இதனை கொண்டு போய் உன் தாய் அனுமதிக்கப்பட்ட மருத்துவமனையில் குறிப்பிட்ட ஒரு மருத்துவரின் பெயரைச் சொல்லி ,அவரிடம் கொண்டு போய் கொடு! என்று கூறி அனுப்பி வைத்தார்.

சிறுவனும் அவ்வாறே நேராக மருத்துவமனைக்கு சென்று அந்த மருத்துவரை கண்டு அந்த உறையை கொடுத்தான்.



அந்த உறையை பிரித்து பார்த்த மருத்துவர், மருத்துவமனையின் நிறுவனர் தன் கைப்பட எழுதிய அந்த கடிதத்தை கண்டு அதிர்ந்து போய் உடனே அந்த தாய்க்கு தீவிர உயர்தர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து, அந்த சிறுவனின் தாயை காப்பாற்றினார்.

முக்கிய மருத்துவர்கள் புடை சூழ மருத்துவ மனையின் நிறுவனர் (அதாவது அந்த பெரியவர்) உயிர் பிழைத்த தாயை காண வந்தார். அவர்களை பார்த்த தாய், மருத்தவ செலவை பற்றி நினைத்து, என்ன ஆகுமோ என அச்சத்தில் உறைந்து இருந்தாள்.

அந்த பெரியவர், அந்த ஏழை தாயிடம் கவலை படாதீர்கள், உங்கள் சிகிச்சைக்கான அனைத்து தொகையும் உங்கள் மகன் செலுத்தி விட்டான். இதை கேட்டதும் தாய், அதிர்ந்துபோய் தன் அருகே தூங்கிக்கொண்டிருந்த தன் மகனை பார்த்தாள்.

மேலும் தொடர்ந்த பெரியவர், செலவு போக மீதித் தொகையை உங்கள் மகனை படிக்க வைப்பதின் மூலம் திருப்பி கொடுத்து விடுகிறேன் என்றார்.

தாய் மிகவும் பயந்து போய் அந்த பெரியவரிடம் காரணத்தை கேட்டபோது, அவர் " உங்கள் மகனின் அந்த கடவுள் மீதான நம்பிக்கை மற்றும் கடவுளை பெற்றே தீருவேன் என்ற விடா முயற்சி ஆகியவைதான் இந்த சேவையை செய்ய



# மறக்க முடியாத பஜ்ஜி நினைவுகள்!!

மாலை நாலு மணி வாக்கில் ஏதேனும் ஓர் ஓட்டலில் காபி குடிக்கப் போனால், முதலில் கேட்பது, 'சூடா பஜ்ஜி இருக்கா?'

இருந்து விட்டால் ஜென்ம சாபல்யம் அடைந்தாற் போல ஒரு திருப்தி!

மாலை டிபன்களில், தோசை, இட்டிலி போன்ற ஹெவிகளுக்கும், மிக்சர், பக்கோடா போன்ற லைட்களுக்கும் இடைப்பட்ட பஜ்ஜி போண்டாவுக்கே என் பொன்னான ஓட்டு

அதுவும் பெயரிலேயே மரியாதையுள்ள 'பஜ்'ஜி'க்கு, என்றும் என் நாக்கு 'ஏர் இந்தியா' ஸ்டைல் மரியாதை செய்யும்!

அந்தக் காலப் பெண் பார்க்கும் படலத்தில், சொஜ்ஜிக்கும், பஜ்ஜிக்கும் முக்கியப் பங்கு உண்டு. (சொஜ்ஜிபஜ்ஜி காலாகாலத்துக்கும் நல்ல சுவையான ஜோடி).

இதோடு நல்ல கும்பகோணம் டிகிரி காப்பியும் சேர்ந்து கொண்டால் கேட்கவே வேண்டாம் கண்ணை மூடிக் கொண்டு பெண்ணுக்கு 'ஓகே' தான்

ஆனால், பின்னாளில் அதே வீட்டில் தயாராகி வரும் பஜ்ஜிகாபியின் தரத்துக்குக் கம்பெனி உத்திரவாதம் அல்ல

பஜ்ஜி கவனத்தில் தலையாட்டி விட்டு, பின்னர் வாழ்நாள் முழுவதும் ஆடிய தலையுடனேயே இருப்பது பஜ்ஜியின் நீண்ட கால வெற்றியின் ரகசியம்.

மாலை மூணு மணியளவில் கடலை மாவு கரைபடும் போதே களை கட்டி விடும் கிச்சன், உருளை, வாழை, கத்தரி, வெங்காயம், சௌ சௌ எனப்படும் பெங். கத்தரிக்காய், எல்லாம் சில்லு சில்லாய் வெட்டப்பட்டு

(வெங்காயம் ரிங்கு ரிங்காய் பிரியாமல், தின் ஸ்லைசுகளாய் சீவுவது ஒரு தனிக் கலை ரூ்ன்னும் பஜ்ஜிக் கலை),

பஜ்ஜி மாவில் முக்கி எடுக்கப்பட்டு, பதமாய்க் கொதிக்கும் புது எண்ணையில் (முதல் நாள் சுட்ட எண்ணை உதவாது  சில கடைகளில் பஜ்ஜி வாய்க்கு வந்தவுடன் காட்டிக் கொடுத்து விடும்)

மெதுவாய் விடப்படும்  சிறு குமிழிகளுடன் பொறிந்து, பொன்னிறம் ஆனவுடன் சட்டுவத்தில் ( அதாங்க, ஓட்டைகள் நிறைந்த கரண்டி) எடுத்து



பாத்திரத்தில் போட்டு விட்டால்

பஜ்ஜி ரெடி !

கொஞ்சம் கரகரப்பாகவும், அதிகம் உப்பாமலும், உள்ளிருக்கும் காயின் வடிவத்தில் சூடாக வந்து விழும் பஜ்ஜியே, உன்னை ஆராதிக்கிறேன்

அப்படியே சூடாகக் கடித்து விட,

முழுங்கவும் முடியாமல், துப்பவும் மனமில்லாமல் வாய் வழியே புஸ் புஸ் என்று அனல் காற்று வெளியே விட, தின்னும் பஜ்ஜி ஜோர்.

பஜ்ஜியைப் பிய்த்து, காயையும், பஜ்ஜி உறை யையும் தனித்தனியே ஊதி ஊதித் தின்பவர்கள் பஜ்ஜியால் சபிக்கப்பட்டவர்கள்.

காரம் கம்மியாக, திப்பி திப்பியாக தேங்காய்ச் சட்னியும், கொஞ்சம் வெங்காய சாம்பாரும் கூட இருந்தால் கோடி சுகம்.

சாஸோ, கெச்சப்போ ஆபத்துக்குப் பாவமில் லேன்னாலும், இரண்டாம் பட்சம் தான் !

யாரு, டாக்டரா? எண்ணை கூடாதாமா? ..

தண்ணீரில் பொறியாதே

சரி, சரி சாயந்திரம் கிளினிக்குலெ வந்து பார்க்கிறேன்னு சொல்லுங்க ரெண்டு பஜ்ஜியோட

ரெடிமேட் பஜ்ஜி மிக்ஸ் கிடைக்கிறது.

கொஞ்சம் இட்லி/தோசை மாவைச் சேர்த்துக் கொண்டால் பஜ்ஜி கரகரப்பாக இருக்கும்.

ஓரிரண்டு மிமி தடிமனில் சிம்ரன் மாதிரி ஸ்லிம்மா சீவின காய்கள், நல்ல பஜ்ஜிக்கு நள பாகத் தரம் தரக்கூடியவை

ரொம்ப நேரம் எண்ணையில் விடக்கூடாது;

ஆரஞ்சுக்கும், சிவப்புக்கும் நடு வான கலர் உசிதம்.

அதிகம் சூளையில் சுட்ட கருஞ் செங்கல் நிறம் காசிக்குப் போகா மலேயே பஜ்ஜியை ஒதுக்கி வைத்து விடும்.

மேற்படி 'டிப்ஸ்' அகில உலக 'பஜ்ஜி ரிசர்ச் கமிட்டி' யினால் பொது மக்கள் நலன் கருதி பரிந்துரைக்கப் படுகின்றன

'மானசரோவரி'ல் கிராமத்து சாலையோர டீக்கடையில் பஜ்ஜி பொறித்துப் போடுவதை சுவையாக எழுதியிருப்பார் அசோகமித்திரன்.

வாழைக்காயை நீளவாட்டில் சீவிப் போடும் பஜ்ஜியை சின்னநியூஸ் பேப்பர் தாளில் வைத்துக் கொடுப் பார்கள்.

அதில் அழுத்தி எண்ணையை உறிஞ்சிய பிறகு கொஞ்சம் உலர்ந்த பஜ்ஜி டீ யுடன் அதற்கு மக்களிடையே கிராக்கி அதிகம்.

கேரளாவின் நேந்திரம் பழ பஜ்ஜி 'பழம்புழுங்கி' ('பழம்பொறி' ?) ஓர் அசட்டுத் தித்திப்புடன் ரொம்பவும் பிரபலம். ஒன்று தின்றாலே, ஒரு நாள் முழுக்கப் பசிக்காது.

காரம் கம்மியான ஸ்பெசல் மிளகாய் பஜ்ஜி கடற்கரையில் மிகவும் பிரசித்தம்.

பஜ்ஜியின் இக்காலப் பரிணாம வளர்ச்சி

பிரட் பஜ்ஜி கூட கிடைக்கிறது

'தூள்பஜ்ஜி' காரைக்குடி பக்கங்களில் உண்டு

பஜ்ஜிக்கும், பக்கோடாவுக்கும் இடைப்பட்டஒரு வஸ்து

பொட்டலமாகக் கட்டி விற்பார்கள் – செட்டி நாட்டு சுவையுடன் எண்பதுகளில் பாண்டிபசார் சாந்தா பவனில் அறுபது பைசாவுக்கு ஒரு ப்ளேட் ஆனியன் பஜ்ஜியும் (மூன்று),

நாற்பது பைசாவுக்கு ஒரு ஸ்ட்ராங் காபியும் குடித்த நினைவு.

இன்று ஒரு ரூபாய்க்கு சின்ன வெங்காயம் ஒன்று கிடைக்குமா என்பதே சந்தேகம்

இன்று 'நொந்து நூடுல்ஸ்' ஆவதின் அன்றைய ப் பிரயோகம் 'பஜ்ஜியாய்ட்டேம்பா !'

– வாழ்க ப.நே.ம.க.!!

பஜ்ஜி நேசிக்கும் மனிதக் கட்சி

# சமையல் டிப்ஸ்

- வாழைத்தண்டை மிக்ஸியில் போட்டு ஜூஸாக்கி, அடுப்பில் வைத்து கொதிக்க விட்டு, பிறகு ஆற விடுங்கள். ஆறிய ஜூஸில் மோரும், கொஞ்சம் உப்பும் கலந்து குடித்தால் உடலுக்கு குளிர்ச்சி தரும்.
- ஐஸ்கிரீம் தயாரிக்கும் முன் அந்த கலவையுடன் திரவ நிலையில் குளூகோஸ் சிறிது சேர்த்தால், ஐஸ்கிரீம் மிருதுவாக வும் சுவையாகவும் இருக்கும்.
- உருளைக்கிழங்கு வறுவல் செய்யும் போது அதில் சிறிது சோம்பை தூளாக்கி தூவி னால் உருளைக்கிழங்கு வறுவல் கமகம வாசனையுடன் இருக்கும்.
- பல் வலி குறைய துளசி இலை இரண்டு, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத்தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் அழுத்தி வைத்தால் வலி குறையும்.
- இட்லி மீந்து விட்டால் நன்றாக உதிர்த்து தேவையான அளவு கடலை மாவு, பெருங் காயம், வெங்காயம், உப்பு, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்த்து நீர் விட்டு பிசைந்து, கடாயில் எண்ணெய் விட்டு பொரித்து எடுக்க சுவையான இட்லி பக்கோடா தயார்.
- உப்புமா, சாதம், பொரியல், பிரியாணியை ஓவனில் சூடு செய்ய விரும்பினால் சிறிது தளவு நீரை தெளித்து சூடு செய்தால் வறண்டு போகாமல் இருக்கும்.
- ப்ரிட்ஜில் துர்நாற்றம் வராமல் இருக்க எலுமிச்சையை துண்டு களாக்கி ஆங் காங்கே வைக்கலாம். இதனால் துர்நாற்றம் மறைந்து விடும். துர்நாற்றம் வீசாமல் இருக்க வேண்டும் என்றால், எந்த உணவு பொருட்களையும் திறந்து வைக்காமல் நன்கு மூடி வைக் கவும்.
- பயிறு வகைகளை சிறிது விளக்கெண்ணெய் சேர்த்து கிளறி வைத்தால் பல நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.
- மைதா மாவினால் செய்த உணவுகளை குறைத்து கொண்டால் உடல் பருமன் குறையும்.
- உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக் கும்.
- வெங்காய பஜ்ஜி செய்யும் போது வெங் காயத்தை சிறிதளவு வதக்கி பஜ்ஜி செய் தால், வட்டம் பிரிந்து வராமல் இருக்கும்.
- பனீர் பட்டர் மசாலா வீட்டில் செய்யும் போது இஞ்சி, வெங்காய விழுதை நன்றாக வதக்கிய பிறகே மற்ற பொருட்களை வதக்கவேண்டும். கூடுதல் சுவைக்கு முந்திரி, கசகசா, ஒரு டீஸ்பூன் தேங்காய் விழுதை சேர்த்து அரைத்தால் சுவையாக இருக்கும்;.
- ஆப்பத்துக்கு மாவு அரைக்கும் போது தேங்காய் துருவலுடன், தேங்காய் தண்ணீ ரையும் சேர்த்து அரைத்தால், அருமையான ஆப்பம் தயார்.
- குருமா, கிரேவி, நூடுல்ஸ் போன்றவற்றுக்கு



தக்காளி சேர்ப்பதற்கு பதில் தக்காளி கெச்சப் சேர்த்து சமைத்து பாருங்கள். நிற மும் சுவையும் சூப்பராக இருக்கும்.



- வாடிப்போன காய்கறிகளை வினிகர் கலந்த தண்ணீரிலோ அல்லது உப்பு தண்ணீரிலோ பத்து நிமிடம் போட்டு வைத்த பிறகு எடுத்து சுத்தம் செய்து பயன்படுத்தினால் புதியது போல இருக்கும்.
- தேங்காய் தண்ணீரை ரசத்தில் சேர்த்தால் இளநீர் ரசம் போல மணமாகவும், சுவை யாகவும்; இருக்கும்.
- கறிவேப்பிலை துவையல் அரைக்கும்போது சுக்கை உப்பு தடவி வாணலி அல்லது தவா வில் போட்டால் அது உப்பிக் கொண்டு வறுபடும். இதை கறிவேப்பிலை துவையல் உடன் சேர்த்து அரைத்தால் ருசியாக இருக்கும்.
- அடை கரகரப்பாக இருக்க துவரம்பருப் பை அதிகம் சேர்க்கலாம். அடைசற்று மெதுமெதுவென இருக்க உளுத்தம்பருப்பை அதிக அளவு சேர்க்க வேண் டும்.
- புளிப்பில்லாத மாங்காய்களை தோல் சீவி வேக வைத்து சர்க்கரை பாகுடன் அடுப் பில் வைத்து கிளறி ஜாமாக செய்து சாப் பிடலாம்.



- தோல் சீவி துண்டுகளாக்கிய முலாம்பழத் துடன் பொடி செய்த வெல்லம், கொஞ்சம் எலுமிச்சைச்சாறு விட்டு மிக்ஸியில்போட்டு அரைத்தால் திடீர் விருந்தினர் வருகைக்கு உடன டியாக செய்யக்கூடிய ஸ்மூத்தி தயார். தேவையென்றால் ஐஸ் சேர்த்து கொள் ளலாம்.

- A.S.Govinda rajan




# காதல் முயற்சி

விதி சில நேரங்களில் மனிதனை வெட்டும் போது, அவனுடைய அடையாளத்தையும் சேர்த் தே வெட்டி விடுகிறது.

ராஜாவுக்கு நடந்த விபத்து அப்படித் தான். இரண்டு கைகளையும் இழந்தான்.

ஆனால் அதைவிட ஆழமாக, வாழ்க்கை மீதான நம்பிக் கையையும் இழந்தான்.

எல்லோரும் காட்டும் இரக்கத்தை அறவே வெறுத்தான்.

அது நாள் வரையில் அவனுடன் ஒட்டி உற வாடிய அத்தைப் பெண் மீனா அவனத் தவிர்க்க ஆரம்பித்தாள். அது புரியாத ராஜா அவளிடம் முன் போலவே பழக, கோபமான மீனா, அவனைப் பரிகசிக்கும் விதமாக,

"மாமா நீங்க என்னை ஓவியமா வரையுங்க... அது நல்லா இருந்தா உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன்." என்றாள் நக்கலாய்.

அவளுக்கு அது விளையாட்டு.

ராஜாவுக்கு அது வாழ்வின் மறுபிறப்பு.

அன்று இரவு, அவனுக்குள் ஒரு சிறு தீப் பொறி. "கை இல்லாவிட்டால் என்ன... வாயால் தீட்டுகிறேன்"

அடுத்த நாள் பிரஷ் அவன் உதடுகளுக்கு இடையில் குடியேறியது.

பற்கள் வலித்தன. உதடுகள் கிழிந்தன. கழுத்து உறைந்தது. ஆனால் மனம் தளரவில்லை.

முதல் கோடு நடுங்கியது. இரண்டாம் கோடு சற்றே தைரியம் கூடியது.

மூன்றாம் மாதம் பாதி ஓவியம் வந்தது.

ஆறாம் மாதம் ஓவியம் இறுதிக் கட்டத்தை எட்டியது.



மீனாவை அழைத்து அவளை எதிரே அமர வைத்து வாயால் பிரஷ்ஷை கவ்வி அவள் முகத்தை வரைய ஆரம்பித் தான்.

ஒவியம் முடிந்த போது அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

சரண்டர் ஆனாள். "மாமா நான் குடுத்த வாக்குப்படி உங்களைத் திருமணம் செய்து கொள்ள நான் தயார்!" என்றாள்.



ராஜா சிரித்தான். "மீனா... என்னைப் போல் இரு கைகளும் இல்லாதவன் உனக்கு நிழலாக இருக்க முடி யாது, வாழ்க்கை நீண்ட பாதை.... அதில் உனக்கு பாதுகாப்பாய்ப் பிடிக்க இரண்டு கைகள் வேண்டும்... அதனால் இரு கைகளும் உள்ள ஆடவனைப் பார்த் துத் திருமணம் செய்து கொண்டு வாழு!" சொல்லி விட்டு அவன் நடந்தான்.

– முகில் தினகரன்
கோயமுத்தூர்

ஹரியானாவின் சிர்சா (Sirsa) பகுதி யில் நடைபெற்ற இந்த நெகிழ்ச்சியான சம்பவம்

ஹரியானாவின் சிர்சா (Sirsa) பகுதி. திருமணம் முடிந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு குடும்பத்தின் கார், எதிர்பாராத விதமாக ஆழமான கால்வாயில் பாய்ந்தது. காருக்குள் 4 வயது மற்றும் 2 வயது குழந்தைகள் உட்பட மொத்தம் 6 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர்.

இதுவே ஒரு 'ஸ்மார்ட் சிட்டி'யாக (Smart City) இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? ஒருவேளை இது ஒரு துயரச் செய்தியாக முடிந்திருக்கும். கார் மூழ்குவதைப் பார்த்துப் பதறுவதற்குப் பதிலாக, பலர் தங்கள் போனை எடுத்து 'இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்' (Instagram Reels) எடுக்கத் தொடங்கியிருப்பார்கள்.

ஆனால், இது ஹரியானா! இங்கே மக்கள் விபத்தைப் பார்த்தால் கேமராவைத் தேடுவதில்லை, காப்பாற்றக் கைகளை நீட்டுகிறார்கள்.

வேடிக்கை பார்க்காத வீரர்கள்:

அந்த வழியாக பைக்கில் சென்ற ஒருவர் விபத்தைப் பார்க்கிறார். அவர் போலீஸுக்கோ, ஆம்புலன்ஸுக்கோ காத்திருக்கவில்லை. "சிஸ்டம் சரியில்லை" என்று ட்வீட் (Tweet) போடவில்லை. உதவி கேட்டு சத்தமாக அலறினார்.

# ரீல்ஸ்க்கு மொபைலை தேடாத ஈரம் நிறைந்த இதயங்கள்





அடுத்த 3 முதல் 4 நிமிடங்களில் நடந்தது தான் அற்புதம்!

எந்த உயிர் காக்கும் கவசமும் (Life jackets) இல்லை.

ஆக்சிஜன் சிலிண்டர்கள் இல்லை.

இருந்தது ஒன்றே ஒன்றுதான் தைரியம் மற்றும் மனிதாபிமானம்!

உள்ளூர் இளைஞர்கள் சற்றும் யோசிக்காமல் அந்த ஆழமான கால்வாயில்குதித்தனர். கையில் கிடைத்ததைக் கொண்டு காரின் கண்ணாடிகளை உடைத்தனர். கார் முழுமையாக நீருக்குள் மூழ்குவதற்கு சில நொடிகள் இருக்கும் நிலையில், அந்தப் பிஞ்சு குழந்தைகளையும், மற்றவர்களையும் பத்திரமாக வெளியே இழுத்தனர்.

மனிதம் தான் உண்மையான 'சிஸ்டம்':

அதிகாரிகளுக்காகக் காத்திருந்திருந்தால், இன்று 6 சடலங்களைத்தான் மீட்டிருக்க முடியும். ஆனால் கிராம மக்களின் வேகத்தால் 6 உயிர்கள் பிழைத்தன.

நமது நகரங்களில் சிசிடிவி (CCTV) கேமராக்கள் உள்ளன, அவசர உதவி செயலிகள் (Apps) உள்ளன. ஆனால், கண்முன்னே விபத்து நடந்தாலும் வேடிக்கை பார்க்கும் கூட்டமாக நாம் மாறிவிட்டோம். ஆனால் சிர்சா கிராம மக்கள், "ஒன்றுபட்ட கிராமம் எந்த சைரனை (Siren) விடவும் வேகமானது" என்பதை நிரூபித்துள்ளனர்.

தங்கள் உயிரையோ, குளிர்ந்த ஆணையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. அந்த 2 வயது குழந்தையின் மூச்சுக்காற்று மட்டுமே அவர்களுக்கு முக்கியமாக இருந்தது. இதுதான் இந்தியாவின் உண்மையான ஆன்மா!

துயரத்தை 'கண்டெண்ட்' (Content) ஆக்கும் நகரங்களுக்கு மத்தியில், மனிதத்தை வாழ்வியலாகக் கொண்ட ஹரியானாவின் இந்த வீரர்களுக்கு ஒரு ராயல் சல்யூட்!

"ஹீரோக்களுக்கு சீருடை தேவையில்லை... ஈரம் உள்ள இதயம் போதும்!"

# மாங்காய் பச்சடி



அறுசுவை கொண்ட மாங்காய் பச்சடி தேவையான பொருட்கள் :ஒட்டு மாங்காய் ஒன்று, வெல்லம் 200 கிராம், பச்சை மிளகாய் 2 ,உப்பு ஒரு சிட்டிகை, ஒரு ஸ்பூன் வெப்பம் பூ, தாளிப்பதற்கு ஒரு ஸ்பூன் கடுகு, எண்ணெய் சிறிதளவு, இரண்டு ஸ்பூன் அரிசி மாவு.

செய்முறை: மாங்காயை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும் பாத்திரத்தில் இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி மாங்காயை அதில் போட்டு நன்றாக வேக வைக்கவும் அதனுடன்பச்சை மிள காய் சேர்க்கவும். மாங்காய் வெந்த பிறகு நறுக்கி வைக்கப்பட்ட வெல்லத் தை சேர்க்க வும்.

வெல்லம் நன்றாக கரைந்த பிறகு ஒரு சிட்டிகை உப்பை சேர்க்கவும். நன்றாக கொதித்த பிறகு அதில் வேப்பம்பூவை போடவும் நன்கு கலக்கவும் பிறகு அரிசிமாவை தண்ணீரில் கலந்து அதில் ஊற்றவும்.



2 நிமிடம் கழித்து கீழே இறக்கி வைக்கவும் பிறகு கடுகு தாளிக்கவும் .மாங்காய் பச்சடி ரெடி சூடாக பரிமாறவும் நாக்கில் எச்சை ஊறுகிறது குழந்தைகள் மிகவும் விரும்பி சாப்பிடுவார்கள்

– எம்.எல். பிரபா,
ஆதம்பாக்கம், சென்னை–88.

# Secret ஓவியன்


பாகம் 05

■ நிரஞ்சனா நெப்போலியன்

## முதல்கட்ட விசாரணை

தன் மனதை அழுத்தும் விஷயங்களில் இருந்து, தன் மனதைத் திசைத் திருப்பவது ஒன்றும் ஓவியனுக்குக் கடினமான காரியமாக இருந்ததில்லை. வழக்கு சம்பந்தமான கோப்புகளில் தன் கவனத்தைச் செலுத்துவதன் மூலம், அதைச் சுலபமாய் செய்து விடுவான் ஓவியன். ஆனால் அவன் மனதிற்கு ஏதாவது விசித்திரமாய் பட்டால், அவ்வளவு சுலபத்தில் அவன் மனம் அமைதி அடைந்து விடுவதில்லை.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்கின் கோப்புகளை மறுபடியும் மறுபடியும் எடுத்து பார்க் கும் பழக்கம் இல்லாதவன் ஓவியன். ஒருமுறை அட்ச்சர சுத்தமாய் அவன் அதைப் படித்து முடித்து விட்டால், மறுபடியும் அதைத் தொடுவதே இல்லை. அது அவனுக்கு மனப்பாடம் ஆகாத வரை, அவன் அதைக் கீழே வைப்பதும் இல்லை.





இப்பொழுதும் அப்படித்தான், தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்த வழக்கை எப்படி முன்னே கொண்டு செல்வது என்பதை ஒரு சார்ட்பேப்பரில் வரைந்தான். அதை முடித்துவிட்டு, நாளை எங்கிருந்து எப்படி வழக்கைத் துவங்குவது என்று எண்ணியபடி கட்டிலில் சாய்ந்தான். அவன் கையாள வேண்டிய மிகப்பெரிய சவால் அவன் கண் முன்னே உருவெடுத்து நிற்கிறது. அவனது மனமும் அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தது. என்றாலும், அதற்கிடையில் அவன் மனதில் தோன்றிமறைந்த தூரிகையின் அழுத முகமும், அண்ணி என்ற கதறலும் அவனை ஏதோ செய்யத் தான் செய்தது.

மறுநாள் காலை

தனது வீட்டை பூட்டிக் கொண்டு வெளியே வந்த ஓவியனின் கண்கள், அனிச்சயாய் எதிர் வீட்டை அலசின. அதன் கதவுகள் சாத்தப்பட்டிருந்தது. தனது காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, உள்ளிருந்து ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று உற்றுக்கேட்டான். ஆனால் ஒன்றும் கேட்கவில்லை. அதனால், அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அவன் தரைதளம் வந்த போது, அங்கு அவனுக்காக முருகன் காத்திருந்தான். இந்த வழக்கில் அவன் காட்டிய ஆர்வம் ஓவியனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஜீப்பில் ஏறி அமர்ந்து, டிரைவர் வேலுவை, காரைக் கிளப்பச் சொல்லி பணித்தான்.

"நம்ம இப்ப என்ன சார் செய்ய போறோம்?" என்றான் முருகன்.

"முதல் கொலையாளி, சுபாஷினியோட ஹஸ்பண்டைப் பாக்கப் போறோம்."

"அவர் வேலை செய்றது கலெக்டர் ஆஃபீஸ்ல, சார்."

"அப்ப கலெக்டர் ஆஃபீஸ்க்குப் போகலாம். நம்ம டீமை அங்க வரச் சொல்லுங்க."

அவர்கள் ஆட்சியர் அலுவலகம் வந்து சேர்ந்தார்கள். முருகனை நோக்கி சைகை செய்தான் ஓவியன். உள்ளே சென்ற முருகன் சில நிமிடங்களில் திரும்பி வந்தான்.

"அவர் பேரு அகிலன், சார். ஆதார் கார்டு டிபார்ட்மெண்ட்ல இருக்காரு. ஆனா அவர் இன்னைக்கு ஆஃபீசுக்கு வரல, சார். அவங்க ஒய்ஃப் இறந்ததுக்குப் பிறகு, அவர் ஒழுங்கா வேலைக்கு வர்றதே இல்லையாம்."

ஜிப்பை விட்டு கீழே இறங்கிய ஓவியன், நேராக ஆதார் பிரிவை நோக்கிச் சென்றான். உதவி ஆய்வாளருடன் அவனைப் பின்தொடர்ந்தான் முருகன். அங்கு, எண்ணெய் வைத்து படிய சீவிய தலையும், மஞ்சள் நிற நைலான் புடவைக்கு ஏற்ற மேட்சிங் பிளவுஸ்சும் அணிந்த ஒரு பெண், கணினியில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

ஓவியனின் மடித்துவிடப்பட்ட அரைக்கை சட்டையும், முறுக்கு மீசையும், பிரவுன் நிற காலணிகளும், வந்திருப்பவன் யார் என்பதை அந்தப் பெண்ணுக்குக் கூறியது.

"நான் அசிஸ்டன்ட் கமிஷனர் ஓவியன்." அவளிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டான் ஓவியன். அதைக் கேட்ட அந்தப் பெண்மணி எழுந்து நின்றார்.

"உட்காருங்க, மேடம். எனக்கு அகிலனைப் பத்திச் சில விவரங்கள் தேவை."

"கேளுங்க, சார்."



"உங்க பேர் என்னமா?"

"சீதா."

"சீதா, அகிலனைப் பத்தியும், அவருக்கும் அவரோட மனைவிக்கும் இருந்த உறவுமுறை பத்தியும் உங்களுக்கு என்ன தெரியும்?"

தங்களுடன் வந்திருந்த உதவி ஆய்வாளருக்குச் சைகை செய்தான் ஓவியன். அவர் அந்தப் பெண் கூறியதை, தான் கொண்டு வந்திருந்த சிறிய ரெக்கார்டரில் குரல் பதிவு செய்யத் தயாரானார்.

– தொடரும்...

தினமும் புதிய புதிய
இசை வீடியோக்கள்
ஆன்மிக பாடல்கள்
சுவையான சமையல்
வீடியோக்களை
வெளியிடும்

dheivamtv.com

இணையதளத்தை பார்க்கவும்

வாட்சப் மற்றும் தொலைபேசி எண்
7789941009

# மீம்ஸ் கலாட்டா


அம்மா பகல்ல வர தூக்கம் நைட்ல வர மாட்டேங்குதே... என்ன வியாதியா இருக்கும்.
அம்மா
இதற்கு பெயர் தான் ஃபோன் நோண்டியா வியாதி மகனே...
நான்


சீரியல் பார்த்தது போதும்...
சோறு போடு...
கெஞ்சிய கணவரை வெட்டிய மனைவி
எவ்வளவு நேரமானாலும் பரவால்ல நீ சீரியல் முடிஞ்சதுமே சோறு போடுமா..
அப்பாவி கணவர்ஸ்


இந்த தடவை தீபாவளிக்கு 1 லட்சம் போனஸ்ன்னு சொல்றாங்க
இல்ல ஜி இந்த தடவை ப்ரொடக்ஷன் அதிகம்ல அதனால 2 லட்சம்ன்னு பேசிகிட்டாங்க, டேக்ஸ் வேற பிடிப்பாங்களான்னு தெரியல...
கம்பெனி
தீபாவளிக்கு போனஸ்க்கு அந்த சோன் பப்டி ஆர்டர் போடு


மழை + காபி +பஜ்ஜி +இளையராஜா சாங்ஸ் =சொர்கம்❤️❤️
இப்படி ல சொல்ல ஆசை தான் ஆனா அந்த பஜ்ஜி யே நம்ம தான் போடணும் னு நினைக்கும் போது தான்...




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

தமிழ்நாடு
இ பேப்பர்.காம்

# சித்தியாய், அன்னையாய்



ஆடித்தான் போனான் சுமன், வீனாவின் பதிலைக்கேட்டு: கேள்விக்கான பதில் அல்ல அது: அவள் பேசிய வார்த்தைகள், அவன் மனதில் எழுந்து அவனையும் அவனின் குடும்பத்தாரையும் அசையாமல் நிற்க வைத்த அவள் தரப்பு வாதம். செய்வதறியாமல் சற்றே கலங்கி தன்னை தானே தேற்றிக்கொண்டு சமநிலைக்கு வர முயன்று கொண்டிருந்தான் சுமன்.

அவனுடைய மனம் அதன் எண்ண அலைகள் பின்னோக்கி நகர அந்நாளைய நினைவலைகள் அவனை சற்று சாந்தமாக்கியது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு சுமனின் மனைவி பிரவீணா கொரோனா எனும் அரக்கனின் கோரப்பிடியில் சிக்கித்தவித்து இரண்டு குழந் தைகளையும், என்னையும் தவிக்கவிட்டு எங் களை பிரிந்து, மேலுலகம் சென்றுவிட்டாள்.

கல்யாணமாகி ஆறு வருடங்கள் கழிந்த நிலையில் இரு குழந்தைகளையும் கல்யாண சாட்சியாக என்னிடம் விட்டுவிட்டு, தனியே சென்று விட்டாள். பெரியவனுக்கு ஐந்து முடிந்து, ஆறு நடந்து கொண்டிருந்தது. சிறியவனுக்கு முதல் வருடம் முடிய சில நாட்கள் இருந்த நிலையில், முதல் வருட கொண்டாட்டம் பற்றிய சிந்தனையில் இருந்தாள். காலன் அழைப்பான் என்று யாரும் நினைத்திராத வேளையில், எல்லாம் முடிந்து விட்டது.

அம்மா இல்லாத குறையை, வீணாவின் தயவில் குழந்தைகள் அவர்கள் அறியவேஇல்லை. சிறுவன் அம்மா அம்மா என்று அழும்நேரம் அம்மாடா நான் என்று அனைத்து அரவனைத்தாள்.

சுமனும் மாற்றலில் மும்பை சென்றுவிட, குழந்தைகள் வீணாவிடமே. இருந்துவிட்டனர். சித்தியாய், அன்னையாய் என்று இரு வேடத்தில் முழு மனதுடன் தன்னை தன் அக்காவின் குழந் தைகளுக்காக அர்பணித்து கொண்டாள்.: எந்த ஒரு சலனமும் சஞ்சலமும் இன்றி அன்னையாகவே மாறி கொண்டிருந்தாள். சுமனும் அவ்வப்பொழுது குழந்தைகளை பார்க்க வரவும் போவதுமாய் இருந்தான்.

இந்த முறை தீபாவளி என்று ஒரு வார விடுமுறையில் சுமன் ஊருக்கு வந்திருந் தான். அன்று இரவு உணவு முடிந்து பேசிக்கொண் டிருக்கும்போது அவனின் மாமனார், மெதுவாக மாப்பிளையிடம் வீணாவின் கல்யாணம் பற்றி பேச முயல, சுமனும் ஆமாம் மாமா நானே பேச வேண்டும் என்று நினைத்தேன்.





அவளுக்கு நானே ஒரு நல்ல வரன் பார்கிறேன், என்று முடிக்கு முன்னரே மன்னியுங்கள் மாமா: அக்கா தன் குழந்தைகளை என்னை நம்பித்தான் விட்டு சென்றிருக்கிறார். என்னால் என் திரு மணத்தை பற்றி சிந்திக்கவே முடியாது என்று ஒரே வார்த்தையில் கூற எல்லோரும் திகைத்து நின்றனர்.

அங்கிருந்த வீணாவின் தாய் தன் கணவரை உள்ளே அழைக்க அங்கு அவர்கள் விவாதம் திசை மாறி ஏன் வீணாவை இரண்டாம் தாரமாக சுமனுக்கு கட்டி வைக்க கூடாது என்ற கேள்வி எழுந்தது.

வீணா கல்யாண வயதை அடைந்து விட்டாள். சுமனுக்கு கட்டி வைப்பதில் எல்லாவற்றிக்கும் ஒரே விடையாக இதுவே ஆகிவிடுமே என்று நம்பினர். வீணா ஆசைப்படியே குழந்தைகள் அவளிடம் இருக்கும். பெற்றவர்களுக்கு அடுத்த பெண்ணின் கல்யாண வேலை முடிந்ததாக இருக்கும். வீணாவின் முகமும் இந்த முடிவு தவறு என்று கூறவில்லை.

ஆனால் சுமன் மட்டும் , தான் ஒரு முழுமையான வாழ்கையை பிரவினாவுடன் வாழ்ததாகவும், அதுவே போதுமான ஒன்றாகவும் உள்ளது என்று கூற, அமைதி அங்கு குடிகொண்டது. இரண்டாம் தாரமாக வீணாவை கட்ட மனம் சம்மதிக்கவில்லை என்றும், அவளுக்கு உண்டான நியாமான ஒரு நல்ல கல்யாண வாழ்க்கை அவளுக்கு வேண்டும் என்றும் அதை தேடித்தருவதில் தனக்கும் பங்கு உண்டு என்று கூற, பின் குழந்தைகள்? என்று வீணாவின் பெற்றோர் கேட்க, அதற்கு விடை சொல்ல முடியவில்லை, சுமனால்.

அடுத்த நாள், ஊருக்கு செல்லுமுன் ஒரு நாள் எல்லோரும் சேர்ந்து வெளியே சென்று ஹோட்டலில் சாப்பிடலாம் என்று சுமன் கூற சரி என்றனர் எல்லோரும். கிளம்புமுன் வீணாவின் அப்பா, தனக்கு வயிறு சற்று சரியில்லாததால் மற்றவர்களை கூட்டி சென்று வருமாறு கூற, புரிந்துகொண்ட வீணாவின் அம்மாவும் அவருடன் தங்கிவிட்டார். குழந்தைகள் ஏமாறக்கூடாது என்பதால் சுமன், வீணா குழந்தைகளுடன் சென் றனர்.

உண்ணும் இடைப்பட்ட நேரத்தில், வீணா, மாமா உங்களிடம் பேச வேண்டும் : பேசுவீர்களா? என கேட்க, என்ன வீணா உன்னிடம் பேசுவதற்கு எனக்கு என்ன தயக்கம்? தாராளமாக பேசு என் றான்.

மாமா, என்னை உங்களுக்கு பிடிக்கவில்லையா? நான் அக்கா மாதிரி அழகா இல்லையா? அக்கா மாதிரி நிறமா இல்லையா? அக்கா மாதிரி படிக்க வில்லையா? மூச்சு விடாமல் வரிசையாக கேள்விகள்: சுமன் தன்னை ஒரு நிமிடம் ஆசுவாசு படுத்திக்கொண்டு, நீ கூறியது போல் இல்லை வீணா. நீயும் அழகுதான்: நிறமும் குறைவில்லை. உன்னை எனக்கு பிடிக்காது என்று சொன்னால் அது நிச்சயமாக பொய்தான். உனக்கு என்ன குறைச்சல். உனக்கு நல்ல வாழ்க்கை அமையும்



என்றான்.

அவள் சற்று தயங்கிக்கொண்டே, கண்ணில் நீர் ததும்ப, பின் ஏன் மாமா என்னை மணக்க தயக்கம்? அப்பாவும் அம்மாவும் உங்களிடம் ஜாடை மாடையாகவும், நேற்று நேரடியாகவும் கேட்டும் நீங்கள் பதில் எதுவும் கூறவில்லை?

இல்லை இல்லை உனக்கு ஒரு நல்ல வாழ்க் கைத்தேடித்தருவது என் கடமை அல்லவா? என்றான்.

உண்மைதான் மாமா. உங்கள் கடமை மட்டு மில்லை: நானும் என் பெற்றோரும் அதைத்தான் எதிர்பார்க்கிறோம்: எங்கள் விருப்பம் கூட அதுவே

உங்கள் வழியிலேயே நானும் வருகிறேன் எனக்கு நல்ல வாழ்க்கை தர நினைக்கும்நீங்கள், ஏன் அந்த வாழ்கையை நீங்களே தரக்கூடாது? உங்களைவிட, எந்த விதத்தில் உயர்ந்த ஒருவரை தேடுவீர் கள். இரண்டாம் தாரம் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதைப்பற்றி நான் நினைக்கவே இல்லை.



என்அக்கா உங்களை மணந்து தரநினைத்த மண வாழ்கையை முடிக் காமல் பாதியில் போய்விட் டாள். அதை நான் தொடர நினைக்கிறேன். அக்காவின் வாழ்க்கை, அவள் பெற்ற இரு என் குழந்தைகள், அன்பான ஒரு கணவர் இதற்கு மேல் ஒரு பெண் என்ன எதிர் பார்க்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? குழந்தைகள் என்னிடம் ஒட்டிவிட்டார்கள்.

நானும் உங்களுடன் வந்து விட்டால் அவர் களும் அம்மா இல்லாத குறையை மறப்பார்கள். எனக்கு வேறு எதுவும் வேண்டாம். இந்த இரு குழந்தைகள் என் குழந்தைகள்: இதுவே எனக்கு போதும் என்று மூச்சு விடாமல் பேசிமுடித்தாள்.

சுமன் பேச வில்லை: பதிலும் கூறவில்லை:கூற முடியவில்லை. ஒரு நிமிடம் அமைதி காத்தான்.

அப்போது கடைசியாக ஆர்டர் செய்த ஃபாலுதா வர, அதை ஒரு ஸ்பூன் எடுத்து இரு குழந்தைகளுக்கு கொடுத்தான். அடுத்த ஸ்பூன் யாருக்கு? என் சுமன் கேட்ட குழந்தைகள் "அம்மா" என்று சொல்ல "எஸ்" என்ற படியே சிரிப் புடன் வீணாவுக்கு கொடுக்க அவள் நாணத்துடன் thank you மாமா என்று ஏற்றுக்கொண்டாள். இருவரும் கை கோர்த்தபடி குழந்தைகளுடன் வீடு சென்றனர்.

– ஓம் குமார் P N.

# சிலநேரம் வாழ்க்கை இப்படித்தான் இருக்கும்



நம் எல்லோருக்கும் மிகவும் பிரியமான பாடகி சின்னகுயில் K. S. Chithra அவர்களின் வாழ்க் கையை நினைத்தாலே மனம் நொந்து போகும்.

பல ஆண்டுகள் காத்திருந்து பெற்ற கண்மணி யான மகள் நந்தனா


ஆனால் அந்த மகிழ்ச்சிக்கு நீண்ட ஆயுள் இல்லை. 2011ஆம் ஆண்டு துபாயில் உள்ள இல்லத்தின் நீச்சல் குளத்தில் தவறி விழுந்து,

அந்த ஒன்பது வயது சிறுமி உயிரிழந்தபோது உடைந்தது சித்ரா அவர்களின் மனம் மட்டும் அல்ல, நம் மனங்களும் தான். மகளின் நினைவு நாள்களில் அவர் பகிரும் குறிப்புகளை வாசிக்கும் போது நம்முடைய கண்களும் அறியாமலே நனை கின்றன.

அந்த பேரிழப்புக்குப் பிறகு பாடலையே விட்டு வைத்து, சித்திரா அவர்கள் வீட்டுக்குள் ஒதுங்கிக் கொண்டார். Guruvayur Temple மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராக இருந்தும், அந்த துயரத்தில் கோவிலுக்குச் செல்வதையும் நிறுத்தியதாகவே அவர் கூறியிருக்கிறார்.

மனதிற்குள் இறைவனை நோக்கி ஒரு கேள்வி, ஒரு வருத்தம்ஷ"இறைவா, நான் யாரிடமாவது தவறு செய்தேனா?" என்று எண்ணி பல நாட்கள் அழுதுள்ளார்.

ஒரு அனுபவம் தான் அவரை மீண்டும் இறை வனிடம் நெருக்கமாக்கியது. திருச்சூரில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றபோது தங்கியிருந்த இடம்



குருவாயூர் கோவிலுக்கு நேர் எதிராக இருந்தது. அது இறைவன் தான் மீண்டும் அழைத்தது போல அவருக்கு தோன்றியது. அந்த நாளில் கோவி லுக்குள் சென்று மனம் திறந்து அழுதபின் சிறிது அமைதி கிடைத்ததாக அவர் கூறியுள்ளார்.

அவர் மீண்டும் பாடத் தொடங்க வேண்டும் என்று பலர் விரும்பினர். அதில் முக்கியமாக Ranjini Haridas மற்றும் Asianet நண்பர்கள் தொடர்ந்து ஊக்குவித்தனர். ஆரம்பத்தில் தயக்கம் இருந்தாலும், பின்னர் Ilaiyaraaja





அவர்களின் கச்சேரியில் தான் சித்ரா மீண்டும் மேடையில் பாடத் தொடங்கினார். தன்னை நம்பி பலர் வாழ்கிறார்கள்; தானே தளர்ந்துவிட்டால் அவர்களின் வாழ்க்கையும் இருட்டாகிவிடும் என்ற எண்ணமே, அந்த ஆழ்ந்த துயரத்திலிருந்து மெதுவாக எழுந்து வர அவருக்கு வலிமை தந்தது

வாழ்க்கை உண்மையிலேயே இப்படித்தான்ஷெ நாம் பல கனவுகள் காண்கிறோம், ஆனால் ஒரு நொடி போதும் எல்லாம் மாறிவிட. இறைவனின் தீர்ப்பே இறுதி என்று நம்பியே நாம் முன்னேற முடியும். எந்த சோதனை வந்தாலும் அதை எதிர்கொள்ளும் வலிமையை இறைவன் தருவார் என்ற நம்பிக்கையோடு சித்ரா அவர்கள் இன்று வாழ்கிறார். அந்த தெய்வீக குரல் என்றும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்


www.panmugam.com

பன்முகம் ●காம்

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi,
Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7789941009



## இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம்.
இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.


அட்டையில்:
ஈகை பட நாயகி அஞ்சலி

# போர் விமான இன்ஜின் இந்தியா முன்னேற்றம்




பிப்ரவரி 16 அன்று பெங்களூருவில் உள்ள கேஸ் டர்பைன் ஆராய்ச்சி நிறுவனத்தில் (GTRE) நமது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட காவேரி எஞ்சினின் 'முழு ஆஃப்டர்பர்னர்' சோதனையை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நேரில் கண்டார், மேலும் சோதனையில் திருப்தி அடைந்தார்.

போர் விமானங்களுக்கான சக்திவாய்ந்த ஜெட் எஞ்சின்களை உருவாக்கும் இந்தியாவின் முயற்சிகளில் இது ஒரு முக்கிய மைல்கல். காவேரி எஞ்சின் திட்டம் பல ஆண்டுகளாக எதிர்கொள்ளும் முக்கிய சவால் என்னவென்றால், அது போதுமான 'ஈரமான உந்துதலை' உருவாக்க முடியவில்லை.

இயந்திரத்தின் சக்தியை அதிகரிக்க வெளியேற்றக் குழாயில் கூடுதல் எரிபொருளைச் சேர்க்கும் செயல்முறை இது. முந்தையபதிப்புகள் சுமார் 73 கிலோநியூடன் உந்துதலை மட்டுமே வழங்க முடிந்தது. வேகமான நவீன போர் விமானங்களுக்கு இது போதுமானதாக இல்லை.

இப்போது விஷயங்கள் சிறப்பாக உள்ளன. சமீபத்திய சோதனையில் புதிதாகவடிவமைக்கப்பட்ட 'ஆஃப்டர்பர்னர்'அமைப்பு பயன்படுத்தப்பட்டது.

இந்த புதிய பகுதி சூப்பர்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகளை தயாரிப்பதில் பிரபலமானபிரம்மோஸ் ஏரோஸ்பேஸின் உதவியுடன் உருவாக்கப்பட்டது.

இந்த புதுமையான அமைப்பு இயந்திரத் தின் உந்துதலை சுமார் 81 முதல் 83 கிலோநியூட்டன்களாக அதிகரிக்க முடியும். (குறிப்பு அல்ல) இது இயந்திரத்தின் சாதாரண உந்துதலை விட 60 சதவீதத்திற்கும் அதிகமாகும். இதன் மூலம், காவேரி இயந்திரம் இந்தியாவின் தேஜாஸ் Mk1 போர் விமானத்தில் பயன்படுத்தப்படும் அமெரிக்க தயாரிக்கப்பட்ட நிணி தி404 எஞ்சினின் உந்துதலுடன் (84 கிலோநியூட்டன்கள்) இணையாக உள்ளது.

சக்திவாய்ந்த ஆஃப்டர்பர்னர் சேர்க்கப்படுவதற்கு முன்பே சக்திவாய்ந்த அடிப்படை



இயந்திரம் ஏற்கனவே சிறப்பாகச் செயல்பட்டது. இந்த மைய இயந்திரம் "உலர் காவேரி" அல்லது "காவேரி வழித்தோன்றல் இயந்திரம்" என்று அழைக்கப்படுகிறது. சமீபத்திய தரை மற்றும் உயர சோதனைகளில் இது தொடர்ந்து 49 முதல் 51 கிலோநியூட்டன்கள் வரை உலர் உந்துதலை வழங்குவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.


இந்த இயந்திரத்தின் உலர் பதிப்பு இந்தியாவின் எதிர்கால திருட்டுத்தனமான ஆளில்லா போர் ட்ரோனான DRDO கட்டக்கிற்கு சக்தி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது ஆஃப்டர்பர்னர் வெற்றிகரமாக இயங்கி வருவதால், காவேரி இயந்திரத்தை எதிர்கால மனிதர்கள் கொண்ட போர்விமானங்களிலும் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கைபுதுப்பிக்கப்பட்டுள்ளது. இது தேஜாஸ் Mk1A விமானம் அல்லது மேம்பட்ட நடுத்தர போர் விமானம் திட்டத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

இந்தியாவிற்கு முக்கியத்துவம்ஜெட்என்ஜின்களை உருவாக்குவது பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் 'ஹோலி கிரெயில்' (மிகவும் கடினமான சாதனை) என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் சீனா போன்ற சில நாடுகள் மட்டுமே அத்தகைய இயந்திரங்களை தாங்களாகவே முழுமையாக தயாரிக்க முடிந்தது.

நீண்ட காலமாக, இந்தியா வெளிநாட்டு இயந்திரங்களை நம்பியிருக்க வேண்டியிருந்தது. விநியோகச் சங்கிலிகள் மற்றும் பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்ததால் இது பெரிய சவால்களை ஏற்படுத்தியது.





# மர்மம் நிறைந்த நேட்ரன் ஏரி

இந்தஉலகில் நமக்கு தெரியாத எவ்வளவோ இடங்களில் பல ஆச்சரியங்களும், விசித்திரங் களும் நடந்தேரிய வண்ணம்தான் உள்ளது. அதை எல்லாம் கேள்விப்படும் போது நமக்கு வியப்பாகவே இருக்கும். இது எல்லாம் உண்மை தான என்று யோசிக்க வைக்கும்.

அந்தவகையில் பல ஆச்சரியங்களையும், மர்மங்களும் தன்னகத்தே உள்ளடக்கிய ஒரு ஏரிதான் இந்த நாட்ரான் ஏரி (Natron Lake)... நம்மை எல்லாம் வியப்பில் ஆழ்த்தப்போகும் இந்த ஏரியை பற்றி இப்பதில் பார்க்கலாம் வாருங்கள்.

மேலே படத்தில் உள்ளதுதான் நாட்ரான் ஏரி. செந்நிறத்தில் அழகாகவும் அதே சமயம் பார்க்கவே படு பயங்கரமாக இருக்கும் இந்த ஏரி ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள கென்யாவை எல்லையாக கொண்ட தான்சானியா (Tanzania) நாட்டின் வடக்கு பகுதியில் உள்ளது......இந்த ஏரியின் பரப்பளவு 1040 ச.கி.மீ ஆகும். அதா வது இந்த ஏரியானது 57 கி.மீ நீளமும் (35 மைல்), 22கி.மீ அகலமும்(14 மைல்) கொண்டது. இதன் ஆழம் 1 அடி முதல் அதிகபட்சம் 9.8 அடி வரை உள்ளது. அதாவது அதிகபட்சம் மூன்று மீட்டருக்கும் குறைவான ஆழத்தையே காண்டுள்ளது. இந்த ஏரிக்கு நீரானது அதனை சுற்றியுள்ள மலைகளில் ஏற்படும் நீர் ஊற்றே காரணம். இது ஒரு காரத்தன்மை வாய்ந்த உப்பு ஏரி ஆகும்.

இந்த ஏரி ஒரு உப்பு ஏரி என்று குறிப்பிட்டேன் அல்லவா உப்பு என்றால் உங்க வீட்டு உப்போ, எங்க வீட்டு உப்பா அல்ல அதான் நாம் வேதியியல் பாடத்தில் அமிலம், காரம் (உப்பு) என்று படித்திருப்போம் அல்லவா அதேதான்... அதன்படி ph மதிப்பு 7 க்கு குறைவாக இருந்தால் அமிலம்...,,7 க்கும் அதிகமாக இருந்தால் காரம்......காரம் பொதுவாக உப்புகளாகவே இருக்கும் அது எளிதில் நீரில் கரையும் ஆற்றல் உடையது. இப்ப மேட்டர் இன்னான இந்த ஏரியில் உள்ள நீரின் ph மதிப்பு 10.5 லிருந்து 12 வரை இருக்கிறதாம். ph மதிப்பு 12 என்றால் மிக வலிமை மிகு காரம் என்று குறிப்பிடுவர்.. ஆதலால் உலகிலேயே அதிக உப்புத் தன்மை வாய்ந்த ஏரிகளில் இந்த ஏரிதான் முதலிடம்......





இப்பண்பால் இந்த ஏரிக்கு சோடா ஏரி என்ற புனைப்பெயரும் உண்டு... ஆதலால் இந்த உப்பு நீரை எதிர்த்து உயிர்கள் வாழ்வது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

இந்த அதித காரத்தன்மை வாய்ந்த உப்புக்கு காரணம்...அந்த ஏரியின் நீர் நீண்ட காலமாக வெளியேற வழியில்லாமல் ஒரே இடத்தில் இருப்பதால் அதிக அளவு நீர் ஆவியாகி உப்பை நீரிலே விட்டுவிடுகிறது. முக்கியமாக இந்த ஏரியை ஒட்டி உள்ள எரிமலையும் இதற்கு முக்கிய காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அந்த எரிமலையிலிருந்து வெளியேறிய தீப்பிழம்பு என்று சொல்லக்கூடிய வல்கனோ இந்த ஏரியில் அதிகம் படிந்துள்ளது. அந்த வல்கனோவிலிருந்து இந்த ஏரியில் அதிக அளவு சோடியம் கார்பனேட் டிஹைட்ரேட் (sodium carbonate decahydrat) மற்றும் சோடியம் செஸ்கியுகார்ப்னேட் டைஹைட்ரேட்(sodium sesquicarbonate dihydrate) போன்ற கார உப்புக்கள் நீரில் அதிக அளவு கரைந்துள்ளது. பொதுவாக உப்பு தன்மை வாய்ந்த ஏரிகளில் மெக்னீசியம் மற்றும் கால்சியம் உப்புக்கள் தான் காணப்படும். ஆனால் இந்த ஏரியில் இந்த மெக்னீசியம் மற்றும் கால்சியம் உப்பின் அளவு மேற் குறிப்பிட்ட உப்பை விட மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட எரிமலை மற்றும் நீர் ஆவியாகி பெறப்பட்ட ஏரியில் காணப்படும் உப்புகளைத்தான் நாட்ரான் (Natron) என்று அழைக்கின்றனர். இதன் பொருட்டே இந்த ஏரிக்கு நாட்ரான் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாட்ரானை பயன்படுத்தி எகிப்தியர்கள் மம்மிக்கள் என்று சொல்லக்கூடிய இறந்த உடல்களை பதப்படுத்தினர்.....அதே மாதிரி இந்த ஏரியில் நாட்ரான் உப்புக்கள் காணப்படுவதால் இந்த நீரானது மனித உடலையே பதப்படுத்த வல்லது.....ஏன் சொல்லப்போனால் இந்த நீரை அருந்திய மனிதனையே இறப்புக்குள்ளாக்கி அவனை பதப்படுத்தி சிலைப்போல் மாற்றிவிடும் தன்மை கொண்டதுதான் இந்த ஏரி...

அப்படி என்றால் விஷத்திற்கு ஒப்பான இந்த ஏரி நீரை அங்குள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் அருந்தினால் என்னவாகும் என்று நினைத்து பாருங்கள். இறந்து சிலைப்பால் மாறவேண்டியதுதான். ஆம் பறவைகள் அருந்தும் உப்பு நீரானது உடல் முழுதும் பறவி அப்பறவையை அப்படியே உரைய வைக்கிறது.கீழே படத்தை பாருங்கள் நன்கு புரியும்.

அத்தோடு மட்டுமல்லாமல் இந்த ஏரி நீரின் வெப்பநிலை 40 செல்சியஸில் இருந்து 60 செல்சியஸ் வரை இருக்குமாம். நம் உடலை காயப்படுத்துவதற்கு இந்த வெப்பநிலையே போதுமானது. இது ஏன் அவ்வளவு சூடாக காணப்படுகிறது என்றால் அந்த ஏரியை சுற்றியுள்ள வெந்நீர் ஊற்றுக்களும், அந்த நீரில் காணப்படும் உப்புகளே...



மேலும் இந்த ஏரியில் ஆல்ஹா என்றுஅழைக் கப்படும் ஒரு வித பாசியும் அதிக அளவு காணப்படுகிறது. அந்த பாசியில் உள்ள நிறமிகள் காரத்தன்மையுள்ள உப்புகளுடன் வினை புரிந்து இளஞ்சிவப்பு நிறத்தை அளிக்கிறது.

இந்த பாசிகளை தவிர்த்து இந்த உப்புநீரின் சூழலை ஏற்று வாழக்கூடிய ஒரே ஒரு மீன் இனம் அல்கோலாபியா(Alcolapia) என்று அழைக்கப் படும் கார டெலபியாஸ் மீன்கள் மட்டுமே....

விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் அச் சுறுததும் விதத்தில் இருக்கும் இந்த ஏரியை ஒரே ஒரு பறவை மட்டும் தங்களது இருப்பிடமாக தேர்ந்தெடுத்து அங்கு வருடா வருடம் முட்டை யிட்டு தன் இனத்தை பெருக்குகிறது.

ஆச்சரியமாக இருக்கிறதா... ஆம் அந்த பறவையின் பெயர் ஃபிளமிங்கோ. வருடத்திற்கு 30 இலட்சம் அளவில் இந்த பிளமிங்கோ இங்கு கூடுகிறது. ஆதலால் இப்பறவைகளின் தாயக மாக இந்த நாட்ரான் ஏரி திகழ்கிறது.

மற்ற பறவைகள் எல்லாம் இந்த ஏரி நீரை அருந்தி விட்டு உரைந்து போய் சிலையாக நிற்கும் போது.... படத்தில் உள்ள இந்த பறவை மட்டும் எப்படி இந்த கார உப்பு நீரை எதிர்த்து கம்பீரமாக வாழ்கிறது என்கிறீர்களா? சரி தான்...இந்த பிளமிங்கோ பறவை நாரை வகையை சார்ந்த ஒரு பறவை இனம். இவை அந்த நாட்ரான் ஏரியின் சூழலை எதிர்த்து வாழக்கூடியது. அங்குள்ள பாசிகள், அல்கோலாபியா மீன் போன்றவற்றை உண்டு வாழ்கிறது. இப்பறவைகள் நீரை சுத்தமாக வடிகட்டி அதாவது பில்டர் செய்து குடிக்கவல்லது. அதற்கு அதன் அலகில் விஷேசமாக உள்ள ஒரு வித சல்லடை போன்ற சவ்வு தான் காரணம். இதனாலே அந்த கார உப்பு நீர் இந்த பறவைகளை ஒன்றும் செய்ய முடிவதில்லை. மேலும் இந்த பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்கான தேவையான வெப்பநிலை அந்த ஏரியில் உள்ளது. பிளமிங்கே பறவைகள் ஏரியின் கரையோரத்திலே கூடுகள் கட்டுகிறது. ஏரியின் பலத்தால் இந்த இடம் அவைகளுக்கு பாதுகாப்பாகவே உள்ளது.

இந்த ஏரியை ஒட்டி சலே என்ற பழங்குடி மக்கள் மட்டும் வாழ்கின்றனர்....இவர்கள் இந்த ஏரியை மிகுந்த பயத்துடன் எதிர்நோக்குகின்றனர்..இந்த ஏரியில் ஒரு மிகப்பெரிய சக்தி உள்ளதாக இவர்களால் நம்பப்படுகிறது..ஆதலால் அவர்கள் இந்த ஏரியை கடவுளாக கருதுகின்றனர்.

இந்த ஏரியின் உண்மைத்தன்மையை உலகிற்கு புகைபடம் பிடித்து காட்டியவர் நிக் ப்ராண்ட் என்ற புகழ்பெற்ற புகைப்பட கலைஞர் ஆவார். இவர் 2010 முதல் 2012 வரை இந்த ஏரியை ஆய்வு செய்து பல புகைப்படங்கள்



எடுத்து அந்த ஏரியை பற்றிய ஒரு புத்தகமே எழுதி வெளியிட்டார். இதன் காரணமாக 2012 ல் சிறந்த புகைப்பட கலைஞராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த ஏரியை ஒட்டி உரைந்து சிலைப் போல் இறக்கும் பறவைகளை புகைப்படம் எடுத்து ஆய்வாளருக்கு நிக் பிராண்ட் அனுப்பி வைத்தார். ஆனால் அவரது புகைப்படங்கள் போட்டோ சாப் செய்யப்பட்டவை என்று நம்பி ஆய்வு செய்தபின்தான் இது உண்மையான புகைப்படம் என்று நம்பினர் அவர் எடுத்த போட்டாக்களில் சில....

நமது நெஞ்சை ரணமாக்கும் மேற்குறிப்பிட்ட படங்கள் அனைத்தும் புகைப்பட கலைஞர் நிக் ப்ராண்டால் எடுக்கப்பட்டவை......மேற்குறிப்பிட்ட படங்கள் எடுக்கப்படாத வரை இந்த நாட்ரான் ஏரி சாதாரண உப்பு ஏரியாகவே கருதப்பட்டது. பிறகு தான் ஆராய்சி தீவிரமாக்கப்பட்டு ஏரியில் பறவைகள் இறப்பிற்கான காரணமும், பறவைகள் உரைந்து சிலையாக மாறுவதற்கான காரணத்தையும் கண்டறிந்தனர்.

நிக் பிராண்டின் புகழ்வாய்ந்த இந்த புகைப்படங்கள் வெளியாகிய பின்தான் இந்த நாட்ரான் ஏரி உலகம் முழுவதும் பிரபலமடைந்து. மிகப்பெரிய சுற்றுலா தளமாகவும் மாறியது. உலகின் பல பகுதிகளில் இருந்து இந்த அழகான ஆபத்து நிறைந்த ஏரியை கான வந்தவண்ணம் உள்ளனர். அதனால் அந்நாட்டிற்கு ஒரளவு வருமானமும் கிடைக்கிறது.




தான்சானியா நாட்டின் உள்ள பெருநகரமான ஆருஷா என்ற இடத்தில் இருந்து 240 கி.மீ தொலைவில் இந்த நாட்ரான் ஏரி உள்ளது. பயணிகள் இங்கிருந்து பேருந்து மற்றும் கார் வழியாக இந்த இடத்தை அடையலாம்... ஆதலால் யாரேனும் வெளிச்சுற்றுலா சென்றால் இந்த ஏரிக்கு ஒரு முறை சென்று பாதுகாப்பாக பார்வையிட்டு விட்டு வாருங்கள்.

# மீம்ஸ் கலாட்டா


1. எந்த விலங்கின் சிறுநீர் ஷாம்பு தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது?
கரடி
யானை
நாய்
ஏதே.. இதோட குளிக்கிறதே நிறுத்திட வேண்டியது தான்..


உயிர் வாழ மூணு நேரமும் சோறு மட்டும் போதாது..
இடையில் நொருக்கு தீனியும் அவசியம்..


Jafu
Me
டேய் தம்பி ஒரே ஒருக்கா தாடா அண்ணா பெருசா ஊதுரேன்
Child
நானே ஊதிக்குறேன்


*Love Mood
மேகம் கருக்குது மின்னல் சிரிக்கிது
~பசி Mood
கொழம்பு கொதிக்கிது வாசன அடிக்கிது



# எவரெஸ்ட் மற்றும் பசிபிக் கடலின் மேல் ஏன் விமானம் பறப்பதில்லை?

உதாரணமாக நீங்கள் இருசக்கர வாகனத்திலோ அல்லது மகிழுந்திலோ ஒரு நீண்ட தூர பயணம் செல்வதற்கு முன்னர் என்ன செய்வீர்கள்?என்று நினைத்து பாருங்கள்.

வாகனத்தின் மைலேஜ் கணக்கிட்டு எரிபொருள் டேங்க் முழுக்க நிரப்புவோமல்லவா ?அதே கதை தான் இங்கேயும்.

பசிபிக் கடலின் பரப்பளவு பெரிங் ஜலசந்தியிலிருந்து அண்டார்டிகா வரை அதிகபட்ச நீளம் 15,500 கிமீ மற்றும் பனாமாவிலிருந்து மலாய் தீபகற்பம் வரை அதிகபட்ச அகலம் சுமார் 17,700 கிமீ ஆகும். இதன் சராசரி ஆழம் 4,282 மீ ஆகும்

ஒரு ஏர்பஸ் A321neo எரிபொருள் திறன் 32,940 லிட்டர்.1200 கிலோமீட்டர் தூரத்தை இரண்டு மணி நேரத்தில் கடக்க (டெல்லியிலிருந்து மும்பை விமானம் என்று வைத்துக்கொள்வோம்), Airbus A321neo மணிக்கு சராசரியாக 600 கிமீ வேகத்தில் பறக்கும், அதாவது நிமிடத்திற்கு 10 கிமீ.இந்த விமானம் ஒரு மணி நேரத்திற்கு 2,508 லிட்டர் எரிபொருளைச் செலவழிக்கும்.

விமானம் 192 பேர் உட்காரும் திறன் கொண்டதாகக் கருதினால், அது ஒரு கிலோமீட்டருக்கு 4.18 லிட்டர் எரிபொருளை உறிஞ்சும் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. 1200 கிலோமீட்டர் பயணத்தில் மொத்தம் 5,016 லிட்டர் எரிபொருளைச் செலவழிக்கும். அதாவது ஒரு நொடிக்கு 0.683 லிட்டர் எரிபொருள் மற்றும் ஒரு நிமிடத்தில் 41.8 லிட்டர் எரிபொருள்.

போயிங் 747 எரிபொருள் நுகர்வு

ஒரு Airbus A321neo வினாடிக்கு 0.683 லிட்டர் எரிகிறது என்றால், போயிங் 747 ஒவ்வொரு வினாடிக்கும் தோராயமாக 4 லிட்டர்களைப் பயன்படுத்துகிறது, அதாவது நிமிடத்திற்கு 240 லிட்டர் மற்றும் ஒரு மணி நேரத்திற்கு 14,400 லிட்டர்.

டோக்கியோவிலிருந்து நியூயார்க் நகரத்திற்கு 13 மணி நேர விமானத்தில், போயிங் 747



187,200 லிட்டர் எரிக்கக்கூடும். போயிங் வலைத் தளத்தின்படி, 747 ஒரு கிலோமீட்டருக்கு தோரா யமாக 12 லிட்டர் எரிகிறது. 747 இல் 568 பேர் வரை பயணிக்க முடியும். இது 238,840 லிட்டர் எரிபொருளை எடுத்துச் செல்ல முடியும்.

இப்போது கணக்கிற்கு வருவோம்.

A 321 neo விமானமானது பசிபிக்கை கடக்க 29.5 மணி நேரங்களாகும்.

அதற்கு தோராயமாக 74000 லிட்டர் எரி பொருள் தேவைப்படும்.

ஆனால் விமானத்தின் கொள்ளளவு 32940 லிட்டர்மட்டுமே அடுத்து போயிங் 747 விமானம்

பறக்கும் வேகம் 800 கிலோமீட்டர்கள் ஒரு மணிக்கு என்று கணக்கிட்டால் 22 மணி நேரங் கள் தேவைப்படும். மணிக்கு 14400 லிட்டர் எரிபொருள் தேவையென்றால் மொத்த பயண தூரத்துக்கு சுமார் 318600 லிட்டர் எரிபொருள் வேண்டும். ஆனால் விமானத்தில் எரிபொருள் கொள்ளளவு 238840 லிட்டர் மட்டுமே.

அப்படியென்றால் மீதி பயண தூரத்துக்கு என்ன செய்ய இயலும்? கடலில் இறங்கிபெட்ரோல் போட இயலாது. பைக்குகளில் இருப்பதுபோல ரிசர்வ் கிடையாது. அஞ்சு லிட்டர் கேன் எடுத்துக் கொண்டு வழியில் வரும் பைக்குகளில் லிப்ட் கேட்டு பெட்ரோல் பம்ப் வரைக்கும் போகவும் முடியாது.

அதனால் தான் இந்த நீண்ட தூர பசிபிக் கடல் பயணத்தை விமானங்களில் தவிர்க்கின்றார்கள்.

மேலும் ஏதேனும் ஒரு அவசர கால தரை யிறக்கத்திற்கு அதிக பட்சம் ஒருமணி நேர பயண தூரத்திலேயே ஏதேனும் ஒரு விமான நிலையம் தரை பகுதியில் அமைந்திருக்கும்.

அடுத்ததாக மோசமான கணிக்க இயலாத வானிலை மாற்றங்கள் கடலில் அடிக்கடி நிகழ் வதாலும் கடலின் மீது பாதுகாப்பான பயணத்தை எதிர்கொள்ள இயலாது.

பூமியின் மேற்கிலிருந்து கிழக்காக சுழற் சியின் காரணமாக டர்புலன்ஸ் எனப்படும் காற்றின் அதிக வேக ஓட்டம் கடலின்மேல் தடையின்றி




விசையுடன் இருக்கும் காரணத்தாலும், மேற்கி லிருந்து கிழக்காக செல்லும்போது சுலபமாகவும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும்போது கடினமாகவும் பயணமானது இருக்கும் .இது போன்ற வலிமையான காரணிகளால் பசிபிக்கின் மேல் விமானங்கள் பறப்பதை பெரும்பாலும் தவிர்க்கின்றார்கள்.

அடுத்து இமயமலை, அதிகபட்சமாக உயரத்தில் இருக்கும் அதன் சிகரங்களுக்கு இடையில் பறப்பதுவும், எளிதில் இறங்க இயலாத சூழ்நிலைகளும் காரணங்கள். மற்றுமொன்று அவ்வளவு அதிக பட்ச உயரத்தில் செல்லும்போது வளிமண்டலத்தில் குறையும் ஆக்சிஜனும் ஒரு காரணம்

# கார்ப்பரேட் வருவாயை அதிகரிக்க உதவும்

# சுகர்

உங்க வீட்டுல இறைச்சி எத்தனை நாளுக்கு ஒரு தடவை எடுப்பாங்க. எங்கண்ணே மாசத் துக்க மூன்று தடவைதான்..

மாசத்துக்கு மூன்று தடவை சாப்பிட்ற உடம் புக்குள்ள எப்படிடே கொழுப்பு சேரும்?

கோழிக்கறியும், இறைச்சியும் சாப்பிடாம எப் படிடே சுகர் வருது?

பணக்காரர்களுக்கு மட்டும் வந்துட்டுஇருந்த வியாதி இப்போ, கூழும் கஞ்சியும் குடிக்கிற. அண்ணாடங்காச்சிக்கு எப்படி வருது ?

ஆமாண்ணே.. எப்படிண்ணே?

உன்னோட உடம்புல சேர்ற கொழுப்புஇறைச் சினால வரக்கூடியது கிடையாது. எண்ணெய் னால வரக்கூடியது...

என்னாண்ணே சொல்றீங்க?

ஆமா உன்னோட வீட்ல சமையலுக்கு என்ன எண்ணெய் வாங்குற?

பொறிச்சாலும் எண்ணெயின் நிறம் மாறவே மாறாத சூரியகாந்தி எண்ணெய் தான்ணே..

நீ மட்டும் இல்லை முரு கா.. இந்தியாவுல இருக்கிற குறிப்பா தமிழகத்துல இருக்கிற 6.5 கோடி மக்கள்ல, 5 கோடி மக்கள் சூரியகாந்தி எண்ணெய் தான் பயன்படுத்திட்டு வர்றாங்க. ஒரு நாளைக்கு தமிழ் நாட்டுல பயன்படுத்தக்கூடிய சூரியகாந்தி எண்ணெய்யின் அளவு (வீடு மற்றும் ஹோட்டல் மூலமாக) 1 கோடி லிட்டருக்கு மேல்.

நல்ல விஷயம் தானேண்ணே.. சூரியகாந்தி எண்ணெய் உடம்புக்கு நல்லதுன்னு நான் இணையத்துல கூட படிச்சிருக்கேன்ணே..

உன்னோட மேதாவித்தனத்துல தீயை வைக்க.. சூரிய காந்தி எண்ணெய் உடம்புக்கு நல்லதுன்னு படிச்ச நீ, சூரியகாந்தியோட உற் பத்தி அளவை என்னிக்காவது படிச்சிருக் கியா. உலகத்துல ஒரு சில நாட்டுல மட்டும்தான், சூரியகாந்தியையே பயிரிடறாங்க அது மட்டுமல்லாம, அப்படி பயிரிட்டு கிடைக்கிற சூரியகாந்திப் பூவி லிருந்து சென்னையில அயனாவரத்துக்கு கூட





எண்ணெய் சப்ளை பண்ண முடியாது. அப்படியிருக்கும் போது பல கோடி லிட்டர் சூரியகாந்தி எண்ணெய் எங்கிருந்து வருது ?

என்னான்ணே.. அதிர்ச்சியாஇருக்கு? அப்போ அந்த எண்ணெய்லாம்எங்கிருந்துன்ணே வருது ?

ம்... குரூட் ஆயிலிலிருந்து (அது பேரு மின ரல் ஆயில்).

ஏன்ணே.. ரோடு போட்றதுக்கு யூஸ் பண் ணக்கூடிய தார் கூட, குரூட் ஆயிலிலி ருந்து தானே எடுக்குறாங்க?.

கரெக்ட்டா சொன்ன, அந்த தாருக்கு முந்தைய கட்டத்துலதான், நீ நினைச்சுட்டு இருக்கிற சூரியகாந்தி எண்ணெய்யையும் எடுக்கிறாங்க. அந்த குரூட் ஆயிலை, பல முறை சுத்திகரிப்பு செய்த பிறகு, அதுல நறுமணம் எல்லாம் மிக்ஸ் பண்ணி, நடக்குற பெரிய மோசடியிலதான், நாம சிக்கன் பொறிச்சு சாப்பிட்டுட்டு இருக்கோம்.

எல்லாத்துக்கும் வரிஞ்சுக்கட்டிட்டு வரு வியே முருகா நீ வாங்குற சூரியகாந்தி எண் ணெய் பாக்கெட்ல, அந்த எண்ணெய்ல என்ன வெல்லாம் கலந்திருக்கும்னு நீ பார்த் திருக்கியா?

இல்லைண்ணே.. ?

பாரு உண்மை புரியும்...

ஆமாண்ணே அது சாப்பிட்டாதான் சுகர் வரும்னு லேப் டெஸ்ட் பண்ணி பார்த்தீங்களா...

லேப் டெஸ்ட்லாம் வேண்டாம், உன் வீட்டு அடுப்பங்கறைக்கு போ, அந்த சூரியகாந்தி எண்ணெய் ஊத்தி வச்சிருக்கிற பாத்திரத்தைப் பாரு...

என்னா தெரியும் ?

ம்.. பாத்திரத்தோட வெளிப்புறத்தைப் பாரு கொழுப்பு படிஞ்சி பிசுபிசுன்னு இருக்கும். அந்த மாதிரி எண்ணெய் ஊத்தி வைக்கிற பாத்திரம் கூட ஒரு வருஷத்துல கெட்டுப் போகுதுண்ணா மனுஷன் நிலைமைய கொஞ்சம் யோசிச்சுப் பாருடே..

ஏன்ணே.. எங்க வீட்ல பிராண்டட் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஊத்தி வைக்கிற பாத்திரமும் அப்படித்தாண்ணே இருக்கு.

முருகா சூரியகாந்தி எண்ணெய் மட்டும் இல்ல, நீ யூஸ் பண்ற பாக்கெட்ல வரக்கூடிய எண்ணெய் எல்லாமே, குரூட் ஆயிலோட ஒரு பரிணாமம்தான்...

அப்போ நான் சாப்பிடவே முடியாதான்ணே..

ஏன் முடியாது பொறிக்கறதுக்கு கடலை எண்ணெய் வாங்கு, சமையலுக்கு நல்லெண்ணெய் வாங்கு...

எங்க போய் வாங்க்றது, யாரை நம்பி வாங்கறது?

யாரையும், எவனையும் நம்ப வேண்டாம்...



நல்லெண்ணெய் வேணும்னா, நாலு கிலோ எள்ளு வாங்கிக்கோ, கடலை எண்ணெய் வேணுமா கடலை 4 கிலோ வாங்கிக்கோ, செக்கு உன் ஏரியாவுல எங்க இருக்குன்னுதேடி கண்டுபிடி. உன் ஏரியாவுல இல்லியா, வேற ஊருக்குத்தான் போகணுமா? ஒரு நாள் ஆபிஸ் லீவ் நாள்ள மாலுக்கு போறத நிறுத் திட்டு செக்குல போய் எண்ணெய்யைஆட்டி வாங்கிட்டு வா. அந்த எண்ணெய்யை பயன் படுத்திப்பாரு ஆரோக்கியம் தானா வரும்..

ரெண்டு லிட்டர் எண்ணெய்க்காக பல ஊருக்கு போகச் சொல்றீங்கலான்ணே...

நீ ஆரோக்கியமா இருக்கணும்னா.. இதை செஞ்சுத்தான் ஆகணும். இல்லாட்டி, பேய் வரக் கூடிய நேரத்துல இப்படி அரைக்கால் டவுசரை மாட்டிட்டு, நாய்க்கு போட்டியா கிரவுண்ட்ல நடக்க வேண்டியதுதான்..

ஏண்ணே.. கடலை எண்ணெய் கொழுப்பு இல்லையா?

கடலை எண்ணெய் கொழுப்புன்னு இந்த கார்போரேட் காரங்கதான் பரப்பி விட்டது. கடலை எண்ணெய்ல இருக்கிறது 5 சதவீதம் கொழுப்புன்னா, நீ பயன்படுத்துற சூரியகாந்தி எண்ணெய்ல இருக்கிறது 99.9 சதவீதம் மறைமுகமா இருக்கு கொழுப்பு...

ஏன்ணே.. கவர்மெண்ட் இதையெல்லாம் தட்டிக்கேட்காதாண்ணே..

டேய் தம்பி.. இந்தியா கார்போரேட்காரங்க ளோட சொர்க்க பூமி, இங்க நீயும், நானும் வருமான பிரதிநிதிங்க அவ்ளோதான். கார்ப்போரேட் கம்பெனி ஒவ்வொன்னையும் இப்படி தட்டிக்கேட்டுக்கிட்டே இருந்தா கவர் மெண்ட்டை எப்படி நடத்துறது. போய் செக்கு எங்க இருக்குன்னு பார்த்து, உன்னோட உடம்பை முதல்ல பாரு.

இன்னிக்கு பச்சை புள்ளைங்களுக்கெல்லாம் சுகர் இருக்கு எல்லாம் இந்த படுபாவி கார் போரேட் காரங்களோட பணத்தாசை. நமக்கே



தெரியாம, நம்ம புள்ளைங்களுக்கு விஷத்தை கொடுத்திட்டு இருக்கோம். இங்கே இயற்கை மாறல மாறினது நீயும், நானும்தான்.

இங்க சுகர்ங்கற வியாதி, வியாதியே இல்ல, அது கார்ப்போரேட் எண்ணெய் கம்பெனிகளின் சதி. இதுக்குப் பின்னாடி மருந்து வர்த்தகம்னு மாபெரும் மார்க்கெட் ஒளிஞ்சிட்டு இருக்குடே.

இதெல்லாம், டி.வி.யே கதின்னு கிடக்கிற மக்களுக்கு எப்ப தெரியப்போவுதோ?

# மீம்ஸ் கலாட்டா



வலியென்றால் காதலின் வலி தான்
வலிகளில் பெரிது...
பல்லு வலி வந்தா தெரியும்..... காதல் வலி பெருசா? இல்ல பல்லு வலி பெருசான்னு....




பொடுகு நீக்கும் ஷாம்பு வாங்கி யூஸ் பண்ணிணா.. அது, தலைமுடியை கொஞ்சம் கொஞ்சமா நீக்கிட்டு வருது..!
தலைமுடியெல்லாம் நீக்கிட்டு..கடைசியா பொடுகை நீக்கும் போல..





Me ~ என்ன கொசு ரொம்ப கடிக்குதுடி........
She ~ அப்டியா என்ன எந்த கொசும் கடிக்கலியே......டா........
Me ~ கொசு #ரத்தம் தான் குடிக்கும்,.... #தேன் குடிக்காதுடி ........





உன் கூட 123 வருசம் வாழ்னும்டா...
என்னடி 100ல இருந்து 123....?
23 வருசம் என் லைஃப்ல நீ இல்லாம வேஸ்ட் பண்ணிட்டேன், so அந்த 23யும் சேத்து 123 வருசம்....
லவ் யூ டா புருசா ..

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!





தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**



சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்

# மரணம் வரை வளர்ந்து கொண்டே இருந்த மனிதன்

சாதாரண மனிதர்களுக்கு ஒரு வயதிற்கு பிறகு உடல் வளர்ச்சி நிற்கும். ஆனால் ராபர்டின் விஷயத்தில் மரணம் வரை வளர்ச்சி தொடர்ந்துகொண்டே இருந்தது. அவரது பிட்யூட்டரி சுரப்பி (Pituitary gland) அதிக அளவில் வளர்ச்சி ஹார்மோன் சுரந்ததே இதற்குக் காரணம்.

பிறக்கும் போது சாதாரண குழந்தையைப் போல இருந்த ராபர்ட், 8ஆம் வயதில் இருந்த போதே 6 அடி உயரம் வளர்ந்திருந்தார்! (அதாவது தனது தந்தையை விட உயரமாக).

உலகில் அதிக உயரம் கொண்ட மனிதராக கின்னஸ் சாதனை இன்று வரை Robert Wadlow என்பவரின் பெயரில்தான் உள்ளது. 8 அடி 11.1 இஞ்ச் (சுமார் 2.72 மீட்டர்) உயரம் கொண்டிருந்தார். “Alton Giant” என்ற பெயராலும் அறியப்பட்ட அவர், வெளியில் இருந்து பார்க்கும் போது ஆச்சரியமாக தோன்றினாலும், அவரது வாழ்க்கை பல கஷ்டங்களால் நிரம்பியது.

அதிக உயரமும் (சுமார் 200 கிலோ எடை) காரணமாக அவரது எலும்புகள் அந்த உடல் எடையைத் தாங்க முடியவில்லை. நடக்க கால்களில் பெரிய பிரேஸ்கள் அணிய வேண்டியிருந்தது. மேலும், அவரது கால்களில் தொடுதல் உணர்வு முற்றிலும் இழந்திருந்தது.

சாதாரண கடைகளில் இருந்து அவருக்கு உடைகள் அல்லது செருப்புகள் வாங்க முடியாது. அவருக்காக தனியாக தயாரிக்கப்பட்ட செருப்புகள் அக்காலத்தில் 100 டாலருக்கும் மேல் விலை கொண்டிருந்தன (இன்றைய மதிப்பில் அது பெரிய தொகை). சாதாரண நாற்காலி அல்லது படுக்கையிலும் அவர் சுலபமாக அமர முடியாது.

கார் அல்லது பேருந்தில் பயணம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. கால்களை மடக்க முடியாததால், காரின் முன் இருக்கையை அகற்றி வைத்தே பயணம் செய்தார்.

அவரது மரணத்திற்குக் கூட இந்த அதிக உயரமே காரணமாகியது. 1940ஆம்







ஆண்டு ஒரு நிகழ்ச்சியின் போது, காலில் அணிந்திருந்த பிரேஸ் உரசியதால் ஒரு காயம் ஏற்பட்டது. ஆனால் காலில் உணர்வு இல்லாததால், காயம் ஏற்பட்டதையும் அது தொற்றாக மாறியதையும் அவர் அறியவில்லை. தொற்று உடலெங்கும் பரவி, மருத்துவர்களால் கட்டுப்படுத்த முடியாமல் போனது.

இவ்வாறு 1940 ஜூலை 15ஆம் தேதி, வெறும் 22ஆம் வயதில் அவர் மரணமடைந்தார்.

அவரது உடலை யாராவது திருடி விடுவார்களோ என்ற பயத்தால், 10 அடி நீளமான அவரது சவப்பெட்டியின் மேல் ஒரு பெரிய கான்கிரீட் தகடு வைத்து அடக்கம் செய்தனர்.

ராபர்ட் வாட்லோவின் வாழ்க்கைக் கதை கேட்கும்போது, ஆச்சரியத்தை விட அதிகமாக வருத்தமே தோன்றுகிறது



# மின்னல் மனிதர்

அமெரிக்காவைச் சேர்ந்த Roy Sullivanஎன்ற பூங்கா ரேஞ்சரின் கதையை கேட்டால் யாரும் உண்மையிலேயே அதிர்ந்து போவார்கள்! உல கம் அவரை "Human Lightning Rod" என்று அழைத்தது.

தன் வாழ்க்கையில் மொத்தம் 7 முறை மின்னல் தாக்கிய ஒரே மனிதர் இவர்! கேட்கும்போது நம்ப முடியாததாக தோன்றினாலும், ஒவ்வொரு முறை யும் மரணத்தை நேருக்கு நேர் பார்த்தும் அவர் உயிர் தப்பினார்.

மின்னல் தாக்கிய ஆண்டுகள்:

1942: முதல் முறை மின்னல் தாக்கியது – காலில் உள்ள நகம் இழந்தார்.

1969: மின்னல் தாக்கி புருவம் கருகியது.

1970: தோள்பகுதியில் தீக்காயம் ஏற்பட்டது.

1972: தலைமுடி தீப்பற்றி எரிந்தது (அதற்குப் பிறகு அவர் எப்போதும் தன்னுடன் தண்ணீர் வைத்திருப்பார்!).

1973: மீண்டும் தலைமுடி தீப்பற்றி, காலில் காயம் ஏற்பட்டது.

1976: கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

1977: மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது ஏழா வது மின்னல் தாக்கியது – வயிற்றிலும் மார்பிலும் தீக்காயம் ஏற்பட்டது.

இவ்வளவு முறை மின்னல் தாக்கியும் உயிர் தப்பிய ஒரே மனிதர் என்ற சாதனை காரணமாக Guinness World Records பட்டியலில் அவரது பெயர் இடம்பெற்றது.

மேகங்கள் திரண்டு வந்தாலே பயந்து ஒளிந்து விடுவார் என சொல்லப்படும் ராய் சல்லிவனின் வாழ்க்கை இன்று வரை ஒரு அதிசயமாகவே பார்க்கப்படுகிறது.







# நீயோலித்திக் சமூகங்கள்

தெற்கு அரேபியாவில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு பண்டைய நீயோலித்திக் சமூகங்கள் எப்படி உயிர் வாழ்ந்தன என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

தெற்கு அரேபியாவில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு பண்டைய நீயோலித்திக் (Neolithic) சமூகங்கள் எப்படி உயிர் வாழ்ந்தன என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. செக் அகாடமி ஆஃப் சயின்ஸின் தொல்லியல் நிறுவனம் மேற்கொண்ட புதிய ஆய்வின் படி, சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் கடலின் மிகவும் சக்திவாய்ந்த மீன்களில் ஒன்றான சுறா மீனை உணவாக உண்டுள்ளனர்.

கண்ணீரை உறைய வைக்கும் குளிர்... தயாராக இல்லை என்றால் மரணத்தை பரிசளிக்கும் நாடு; சுற்றுலா பயணிகள் குவியும் அதிசயம்

ஓமான் நாட்டில் உள்ள வாடி நஃபுன் (Wadi Nafūn) பகுதியில் நடைபெற்ற அகழாய்வுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வு, கடுமையான சூழலில் வாழ்ந்த ஆரம்ப மனிதர்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக வாழ்க்கை குறித்த முக்கியமான தகவல்களை வழங்கியுள்ளது. வாடி நஃபுன் தொல்லியல் தளம் கி.மு 5ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படுகிறது. மேலும், பல நூற்றாண்டுகளாக சடங்கு நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் ஒரு மெகாலிதிக் கல்லறையும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாடி நஃபுனில் உள்ள கல்லறைகள் மற்றும் புதையல் தளங்கள் முக்கியமான கலாச்சார மற்றும் சமூகப் பங்களிப்பைக் காட்டுகின்றன. இந்த தளங்கள் புதையல் தளமாக மட்டுமல்லாமல் சடங்கு நிகழ்வுகளுக்காவும் பயன்படுத்தப்பட்டதாக தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த புதையல் தளங்களில் இருந்து எடுக்கப்பட்ட


பற்கள் மாதிரிகளை ஆய்வு செய்து, ஆய்வாளர்கள், ஸ்டேபிள் ஐசோட்டோப் (stable isotope) பகுப்பாய்வைப் பயன்படுத்தி பண்டைய சமூகங்களின் உணவுப் பழக்கத்தை கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது, அந்த மக்கள் சுறா மீனை உணவாக உட்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. வறண்ட நிலப்பரப்புகள் மற்றும் கடல் வாழ் உயிரினங்களின் குறைபாடுக்கு பெயர் பெற்ற இந்த பகுதியில் இது ஒரு ஆச்சர்யமான கண்டுபிடிப்பாகும். இது மற்ற உணவு வளங்கள் குறைவாக இருக்கும் சூழலில் உயிர் வாழ்வதற்கு அவசியமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதன் மூலம் அந்த கால மக்கள் இயற்கையுடன் சிக்கலான தொடர்புகளை கொண்டிருந்தனர் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. இந்த சுறா வேட்டையாடுதல் வெறும் உயிர் வாழ்வதற்கு மட்டுமல்லாமல் சமூக உறவுகளை வலுப்படுத்த உதவிய செயலாக இருந்ததாக கூறப்படுகிறது.



# தென்காசியில்
# சிலிக்கான் புரட்சி




குற்றால அருவியும், பசுமையான நெல் வயல்களுமே தென்காசியின் அடையாளமாக இருந்து வந்தன. ஆனால், இன்று அந்த இமேஜ் மாறி வருகிறது. விவசாயத்திற்கும் சுற்றுலா விற்கும் பெயர்பெற்ற இந்த ஊர், இப்போது உலகத்தரம் வாய்ந்த 'செமிகண்டக்டர்' (Semi-conductor) சிப் வடிவமைப்பின் மைய மாக உரு வெடுத்து வருவது பலரையும் ஆச்சரியத் தில் ஆழ்த்தியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தென் காசியில் விவசாயம் தவிர எதுவும் வாய்ப்பு இல்லை என்றே பலருக்கும் தோன்றி இருக்கும்.

ஆனால், இன்று அது மாறி உள்ளது. அமெரிக்காவில் உள்ள இன்டெல் (Intel)நிறு வனத்தில் பொறியியல் இயக்குநராகப்பணியாற் றிய ஆனந்தன் அய்யாசாமி, தனது வேலையை விட்டுவிட்டு சொந்த ஊரான தென்காசியிலேயே "தென்காசி செமிகண்டக்டர்ஸ்" என்ற நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார்.

அதனால், தென்காசி இப்போது 'சிப்டிசைன்' துறையில் கவனம் செலுத்துகிறது. அதாவது, ஒரு சிப் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதற்கான டிஜிட்டல் வரைபடத் தை (Blue-print) உருவாக்குவதுதான் இந்த வேலை.

இங்கு உருவாக்கப்படும் டிசைன்களைக் கொண்டு, குஜராத்தில் உள்ள டாட்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திலோ அல்லது வெளிநாடுகளிலோ சிப்களைத் தயாரித் துக் கொள்ள முடியும். இதற்குப் பெரிய தொழிற் சாலைகள் தேவையில்லை; திறமையான பொறி யாளர்களும், நவீனத் தொழில்நுட்ப அறிவுமே போதும்.


ஸ்ரீதர் வேம்புவின் 'ஜோஹோ' போட்ட விதை தென்காசியில் இப்படி ஒரு மாற்றம்

ஏற்பட முக்கியக் காரணம், ஜோஹோ (Zoho) நிறுவனத்தின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு. பத்து ஆண்டுகளுக்கு முன்பே, "கிராமப்புறங்களிலும் உலகத்தரம் வாய்ந்த டெக் நிறுவனங்களைஉரு வாக்க முடியும்" என்று அவர் நிரூபித்துக்காட் டினார். அங்கே ஐடி நிறுவனத்தை தொடங் கினார்.

மத்தளம்பாறை என்ற கிராமத்தில் வெறும் 6 ஊழியர்களுடன் அவர் தென்காசியில்தொடங் கிய அலுவலகம், இன்று 1,200க்கும் மேற்பட் டோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஒரு பெரிய மையமாக வளர்ந்துள்ளது. பெரிய நகரங்களுக்குச் சென்றால்தான் ஐடி வேலை கிடைக்கும் என்ற நிலையை மாற்றி, கிராமத்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களைத் திறமையாளர்களாக மாற்றியது ஜோஹோ. அந்த நம்பிக்கையில்தான், இன்று செமிகண்டக்டர் போன்ற சவாலான துறைகளும் தென்காசியைத் தேடி வரத் தொடங்கியுள்ளன.

இன்று ஜோஹோ நிறுவனம் தென்காசி பகுதியில் மட்டும் 1,200க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்த வலுவான அடித்தளமே, ஆனந்தன் அய்யாசாமி போன்ற வர்கள் செமிகண்டக்டர் போன்ற சவாலான துறையைத் தென்காசியில் தொடங்கத் துணி வைத் தந்துள்ளது.

இன்று ஜோஹோ நிறுவனம் தென்காசி பகுதியில் மட்டும் 1,200க்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்த வலுவான அடித்தளமே, ஆனந்தன் அய்யாசாமி போன்ற வர்கள் செமிகண்டக்டர் போன்ற சவாலான



துறையைத் தென்காசியில் தொடங்கத் துணி வைத்தந்துள்ளது.

எதிர்காலத் தென்காசி வெறும் கிராமமாக இருந்த தென்காசி தற்போது உலகத்தரம் வாய்ந்த நகரங்களுக்கு போட்டியாக மாறி உள்ளது. பெரிய மென்பொருள் நிறுவனங்கள் சென்னை அல்லது பெங்களூரு போன்ற பெருநகரங்களில் மட்டுமே இயங்க முடியும் என்ற நிலையைத் தகர்த்தெறிந்தார் வேம்பு. பெருநகரங்களைத் தேடி ஓடாமல், கிராமப்புற மாணவர்களிடம் உள்ள திறமையைக் கண்ட றிந்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கினார்.

பெங்களூரு, சென்னை போன்ற பெரு நகரங்களில் பணியாற்றிய பல வல்லுநர்கள் இப்போது தென்காசியை நோக்கி வரத் தொடங் கியுள்ளனர். ஒரு கால கட்டத்தில் விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்த ஒரு ஊர், இப்போது இந்தியாவின் 'டிஜிட்டல்'வரைபடத்தில் முக்கிய இடத்தைப் பிடித்து வருகிறது.

நெல் விளையும் பூமியில் இப்போது 'சிலிக் கான் சிப்'களுக்கான தொழிற் மையங்கள் வளரத் தொடங்கியுள்ளது.





க்வாலியோரின் நெரிசலான தெருக்களில் சூரியன் மறையும் நேரத்தின் சிவப்பு பரவிக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டத்தின் நடுவே பசியால் தளர்ந்த கால்களுடன் ஒரு இளைஞன் நடந்து கொண்டிருந்தான்.

அந்த பொறியியல் மாணவன் சந்தோஷ் பட்டேல் மனதில் பெரிய கனவுகள் இருந்தாலும், வயிற் றுப் பசியை சமாளிக்க அவனிடம் எது வும் இல்லை.

குழாயில் வரும் தண்ணீர் குடித்து பசியை அடக்கி பல இரவுகளை அவன் கடந்து சென்றான். படிப்புக்குத் தேவையான பணம் சம்பாதிக்க போராடிய அவனுக்கு, உண வுக்கு ஏற்பாடு செய்வது கடினமானது.


உறவினர்களுக்குக் கூட அவன் நிலை தெரியாத அந்த கடின காலத்தில்தான், சந்தை யில் ஒரு சிறிய காய்கறி வியாபாரி அவன் வாழ்க்கையில் நுழைந்தார்.

அந்த வியாபாரி, சந்தோஷின் முகத்தை பார்த்தவுடன் நிலையை புரிந்துகொண்டார். எதுவும் கேட்காமல், ஒரு பையில் சில காய் கறிகளை வைத்து அவனிடம் நீட்டினார். “இதை எடுத்துக்கொள், இன்று இதை வைத்து சாப்பாடு செய்து சாப்பிடு,” என்றார். கையில் பணமில்லை என்று சொல்லி சந்தோஷ் மறுக்க முயன்றான். ஆனால் வியாபாரி விடவில்லை.

“இவை விற்காமல் மீதமுள்ளவை தான். வீணாக போவதை விட நீ எடுத்துக்கொள்வதே நல்லது,” என்று அன்பான பொய்யொன்றை சொல்லி அவனிடம் கொடுத்தார். அந்த நாள் தொடங்கிய நன்மை பின்னர் வழக்கமாகியது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், தம்பியைப் போல எண்ணி வியாபாரி கொடுத்த அந்த காய்கறிகள்தான் சந்தோஷின் கனவுகளுக்கு உரமாகின.

ஆண்டுகள் வேகமாக கடந்தன. சந்தோஷ் அவ்வூரை விட்டும் சென்றான்

14 ஆண்டுகளுக்குப் பிறகு, காலம் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தது. அன்றைய ஏழை மாணவன் இன்று மத்திய பிரதேச போலீசில் வலிமையான டி.எஸ்.பி ஆக உயர்ந்திருந்தார். பதவியின் பெருமையிலும், சீருடையின் கம்பீ ரத்திலும் இருந்தாலும், சந்தோஷ் தனது கடந்தகாலத்தை மறக்கவில்லை. பட்டினியில்





இருந்தபோது உணவு கொடுத்த மனிதரைத் தேடி, அதே சந்தையில், அதே எளிமையுடன் காய்கறி விற்றுக்கொண்டிருந்த வியாபாரியை கண்டுபிடித்தார்.

ஒரு போலீஸ் அதிகாரி தன்னைத்தேடி வருவது கண்டு, வியாபாரி முதலில்பயந்தார். ஏன் போலீஸ் வந்திருக்கிறது என்றகவலையுடன் நின்றபோது, சந்தோஷ் சிரித்துக்கொண்டு தனது பழைய வாழ்க்கையை நினைவுபடுத்தினார்.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு தாம் கொடுத்த காய்கறி சாப்பிட்டு பசியை அடக்கிய அந்த இளைஞன்தான் இன்று தன் முன் உயர்ந்த அதிகாரியாக நிற்கிறார் என்பதை உணர்ந்த நொடி, வியாபாரி கண்கள் விரிந்தன.

சந்தோஷ் உணர்ச்சி வசப்பட்டு அவரை அணைத்துக் கொண்டார். “என் வியர்வையால் உங்கள் உடை அழுக்காகிவிடும்” என்று விலக முயன்ற வியாபாரியிடம், “அந்த வியர்வையே அப்போது எனக்கு சக்தியாக இருந்தது” என்று கூறி சந்தோஷ் அவரை நெருக்கமாக அணைத்தார்.

மனிதநேயம் ஜாதி, மதம், பதவிஎல்லாவற்றை யும் தாண்டியது என்பதை நிரூபித்த அந்த அழகான தருணம் அங்கே இருந்தவர்களின் கண்களை நனைத்தது. தாம் செய்த சிறிய உதவி ஒருவரின் வாழ்க்கையை மாற்றியமைத் தது என்பதை உணர்ந்த வியாபாரி, நன்றியுணர் வை மனதில் சுமந்து வாழ்ந்த சந்தோஷ் பட்டேலும், அந்த சந்தையில் மனிதநேயத்தின் புதிய வரலாற்றை எழுதினார்கள். பதவிகள் மாறினாலும், மனிதநேயம் தான் மிக உயர்ந்தது என்ற பெரிய பாடத்தை இந்த உண்மை சம்ப வம் உலகிற்கு சொல்லிக்கொடுக்கிறது.



# ஒரு நொடியில் மாறும் வாழ்க்கை

சமூக வலைதளங்களில் எங்காவது ஒருநாள் இந்த முகத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். கையில் ஒரு தேநீர் கப் பிடித்து சிரிக்கும் அந்த சிறுவன். அந்த சிரிப்பைப் பார்த்து நாமெல்லாம் ஒரு நிமிடம் சிரித்திருக்கலாம். ஆனால் அந்த சிரிப்பின் பின்னால் ஒரு பெரிய போராட்டக் கதை இருப்பதை எத்தனை பேர் அறிவோம்?

Telangana மாநிலத்தைச் சேர்ந்த அருண் என்ற இந்த சிறுவன் ஒரு லாரி கிளீனராக வேலை செய்தான்.

நேரு என்ற டிரைவருடன் வேலை செய்தபோது, அருணின் அந்த சிரிப்பை நேரு தனது மொபைலில் பதிவு செய்து சமூக வலைதளங்களில் பகிர்ந்தார். சில நொடிகளில் அந்த வீடியோ உலகம் முழுவதும் பரவியது.

வறுமையின் கசப்பை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், அந்த வீடியோவில் அருண் சிரித்தது உலகிற்கு ஒரு பெரிய நம்பிக்கையின் அடையாளமாக மாறியது. இன்று அருணின் வாழ்க்கையே மாறிவிட்டது. தன்னை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய நேருவை அருண் தனது கடவுளைப் போல மதிக்கிறார். மூன்றாம் வகுப்பில் படிப்பை நிறுத்த வேண்டியிருந்த அருணை, நேரு மீண்டும் பள்ளியில் சேரச் செய்து உதவினார்.


“வறுமையில் துன்பப்பட்ட அந்த நாட்களில் நான் சிரித்தது என் வாழ்க்கையை மாற்றும் என்று கனவிலும் நினைக்கவில்லை. நன்றாக படித்து ஒரு வேலை பெற்று, என்னைப் போல கஷ்டப்படும் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்பதே என் ஆசை,” என்று அருண் தன்னம்பிக்கையுடன் கூறுகிறான்.

ஒரு நொடியிலே ஒருவரின் வாழ்க்கை எப்படி மாறலாம் என்பதற்கான சான்று தான் அருணின் இந்த புன்னகை. இது வெறும் வைரல் வீடியோ அல்ல ஷ அன்பும் மனிதநேயமும் என்ன செய்ய முடியும் என்பதற்கான அழகான எடுத்துக்காட்டு.

# மகா கலைஞன்

# மம்முட்டி

மம்முட்டி ஒரு ஆள் மட்டுமே இந்த கேரக்டரையெல்லாம் செய்ய முடியும். கேரியரின் தொடக்க காலத்தில் பாபு நம்பூதிரி என்கிற நடிகனை புறந்தள்ளி மம்முட்டி அந்தப்படத்தில் நாயகனானார்.



மம்முட்டியின் ஸ்பெஷல் என்னவென்றால் எந்த கேரக்டர் கொடுத்தாலும் அதற்கு உயிரைக்கொடுப்பது. அவரின் சினிமா பக்தி ஆழமானது.

வக்கீலுக்கு படித்தாலும் சினிமா ஆசை அவரை விடவில்லை. தன் போட்டோ போட்டு பத்திரிக்கைகளில் விளம்பரம் கொடுத்து வாய்ப்புதேடியவர் மம்முட்டி.

எப்போதுமே ஆச்சர்யப்படுத்தும் மம்முட்டியின் கேரக்டர்கள்.

அடியொழுக்குகள் என்கிற படத்தில் மம்முட்டி ஒரு ரௌடி. சிறையிலிருந்து திரும்பி வரும் ரௌடி. இந்த கதாப்பாத்திரம் எப்போதும் கண்கள் சிவந்தே இருக்க வேண்டும். மம்முட்டி ஏதேதோ இலைகளை பறித்து அறைத்து தினமும் கண்களில் ஊற்றிக்கொள்வாராம் உடனே கண்கள் சிவப்பாகி விடும். பர்ஃபெக்ஷனுக்காக கண் உறுத்தல்களை, எரிச்சல்களை பொறுத்துக்கொண்டு அடியொழுக்குகளில் நடித்தார். படம் செம ஹிட். தமிழில் வண்ணக்கனவுகள் என பாலச்சந்தரே ரீமேக் செய்தார். அடியொழுக்குகள் திரையில் தனித்துவத்தை மம்முட்டிக்கு விதைத்தது. முதல் கேரள மாநில விருதும்.

பாலுமகேந்திராவின் யாத்ரா படத்துக்காக தன் முடியை தியாகம் செய்த மம்முட்டிக்கு பின் அமைந்த படங்களெல்லாம் வெற்றி தான். நிறக்கூட்டு பெரிய வெற்றியை பெற்று தமிழ், ஹிந்தி என ரீமேக் செய்யப்பட்டது.

போலீஸ் ஆபிசராக நடித்த 'ஆவநாழி' ட்ரெண்ட் செட்டராக அமைந்தது. இந்தப்படத்தை தொடர்ந்தே போலீஸ் படங்களின் கதைகள் ஒரே ஸ்டைலில் அமைக்கப்பட்டன. ஆவநாழியின் இன்ஸ்பெக்டர் பல்ராம் கேரக்டரின் வீச்சு தமிழில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு படத்தில் சத்யராஜிடம் இல்லை.

மீண்டும் தொய்வடைந்த மார்க்கெட்டை தூக்கி நிறுத்தியது நியூடெல்லி. நியூடெல்லி தமிழ்நாட்டில் மலையாளமொழியிலேயே ரிலீஸ் செய்யப்பட்டு சென்னை சஃபையர் தியேட்டரில் ஒரு வருடம் ஓடியது. ஊரே மனநோயாளி என நினைக்கும் 'தனியாவர்த்தனம்' மம்முட்டியின் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியது.




பின் அவரது 'சாம்ராஜ்ஜியம்' தான். சிபிஐ டைரிக்குறிப்பு சேதுராம அய்யர் ஒரு ஜேம்ஸ்பாண்ட் கதாபாத்திரம் போல புகழடைந்தது. 1921 படத்தில் கிலாபத் இயக்க கலவரம் பற்றி எரியும் போது காதர் என்கிற மம்முட்டி பாத்திரம், சங்கம் படத்தில் சிறிய பையன்களின் காசுள்ள தலைவன், ஆகஸ்ட் 1 படத்தின் டி.எஸ்.பி பெருமாள், மிருகயா படத்தின் புலி வேட்டைக்கு வரும் வாருண்ணி, நாயர் ஸாப் படத்தில் வரும் கேப்டன் ரவீந்திரன் நாயர் என ஆக்ஷனில் கலக்கிய பாத்திரங்கள்.

ஆக்ஷன் மட்டுமல்ல தனக்கு காமெடியும் வருமென லவ்வர் பாயாக உள்ள சரிதாவின் கணவன் குட்டேட்டன், போலீசுக்கு சவால் விடும் திருடன் களிக்களம் படத்தில், இரட்டை வேடத்தில் பரம்பர, பின் வருவதை முன்பே சொல்லும் சூரிய நாராயண அய்யராக அய்யர் தி கிரேட், தாதா ரோலில் சாம்ராஜ்ஜியம், அரசியல்வாதியாக நயம் வ்யத்தமாக்குன்னு, குடும்ப தலைவனாக வாத்சல்யம்..இப்படி எல்லா கேரக்டர்களிலும் வெளுத்து வாங்கினார் மம்முட்டி.

கமர்சியல் படங்களல்லாது ஆர்ட் படங்களில் காலடி எடுத்து வைத்து மதிலுகள், விதேயன், பொந்தன் மாடா என பாத்திரப்படைப்புகளில் வித்தியாசத்தை தந்தவர். மம்முட்டியிடம் என்ன ஸ்பெஷல்னா அறிவில்லாத வேலைக்காரன் மாடாவாகவும் நடிப்பார், அடுத்தவர் மனைவியை வலுக்கட்டாயமாக ஆட்கொள்ளும் ஊர்த்தலைவன் பட்டேலராகவும் வருவார், மூன்று குழந்தைகளின் தந்தையாகவும் வருவார், கலெக்டராகவும் வருவார். எந்த கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காத நடிகன்.

வடக்கன்வீர கதா, படயோட்டம், பழஸ்ஸி ராஜா என ராஜா கதாபாத்திரங்களிலும் தன் அழகான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார்.

மலையாளம் அல்லாது ஹிந்தி, தெலுங்கில் நடித்தாலும் தமிழில் நல்ல பாத்திரங்கள் அவருக்கு கிடைத்தன. மறுமலர்ச்சி ராசுப்படையாட்ச்சி பாத்திரம் வேறு நடிகரை கற்பனையே செய்ய முடியாது. வரலாற்று படங்களான அம்பேத்கர், ஒய்.எஸ்.ஆர் போன்ற பாத்திரங்களிலும் இணங்கிப்போவது அழகு.

ராஜமாணிக்யம் படத்தில் திருவனந்தபுரம் ஸ்லாங் சொல்லிக்கொடுக்க வந்த சுராஜ் வெஞ்ஞாரமூடுவின் திறமை அறிந்து காமெடி பாத்திரங்கள் கொடுத்தும், மறுமலர்ச்சி படத்தில் மணிக்கு தமிழில் சிறிய பாத்திரம் வாங்கிக்கொடுத்து கலாபவன் மணியை வளர்த்து விட்டதும் மம்முட்டியின் மன அழகு. சக போட்டியாளர் மோகன்லால் வளர்ந்து எதிரே நிற்கும் போது அவருடைய படங்களான காந்தி நகர் 2ஸீ ஸ்ட்ரீட், மிஷீ20 மதராஸ் மெயில் படங்களில் கௌரவ வேடத்தில் நடித்துக்கொடுத்ததில் காட்டிய தைரியம்...

எத்தனை நடிகைகளோடு நடித்தாலும் கோஸிப்புகளில் சிக்காது தான் உண்டு, தன் வேலை உண்டு என இலக்கியம் சார்ந்து வாசிப்பு பழக்கத்தை வைத்திருக்கும், வாசித்ததை விவாதிக்கும் பழக்கமுள்ள நடிகர். மகனே மம்முட்டிக்கு போட்டியாளனாக வரும் போது மம்முட்டி போட்டிக்கு நிற்பார்

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இந்தியா எனது மூன்றாவது ஆட்சிக்காலத்தில்

டாப்-3 பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும்

திருச்சி அரசு மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்திற்கு மத்திய அரசு ஏற்பு

Dheivam.com

7789941009

8122664699


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

பழங்குடியின பெண்களை நிர்வாணம்: வெடித்த போராட்டம்

7789941009

8122664699

9445534085/ 8610092700



எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

**சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,**

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், **நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,**


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி நிறைவு

8122664699

**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com



# மனிதர்களைத் தொடரும் நன்மைச் சங்கிலி

சில நாட்களுக்கு முன், பணியிடத்திலிருந்து புறப்பட்டபோது கடும் குளிர். பனி கொட்டித் தீர்க்க, கடும் காற்றும் வீசியது. தப்புவதற்காய் ஒரு தேநீரகத்தினுள் புகுந்து உட்கார்ந்துகொண்டேன்.

பல ஆண்டுகளுக்குமுன், ஒரு தொடர்மாடியில் குடியிருந்தேன். எனது முன்வீட்டில் தாதித் தொழில் புரியும் ஆண் ஒருவர் வசித்திருந்தார். வசந்த காலத்தில் வெளியே உட்கார்ந்திருந்தும் குளிர் காலத்தில் அருகிருந்த தேநீரகத்தின் உள்ளேயிருந்தும் ஒன்றாய்த் தேநீர் அருந்துவோம்.

ஒஸ்லோ நகரத்தின் அவரசகால மருத்துவ வண்டியில் தாதியாகவும், உடலுறுப்புகளை மாற்றும் சத்திரசிகிச்சை நிலையத்தில் மூத்த தாதியாகவும் இரண்டு வேலைகள் செய்துகொண்டிருந்தார் அவர். மிகவும் திடகாத்திரமானவர். குத்துச்சண்டை வீரரும் கூட. சிறப்பான வருமானம், வேலை நேரம் குறைவு என்பதால் அடிக்கடி பயணப்படுவார். ஒவ்வோர் ஊரிலும், நகரத்திலும், நாட்டிலும், கண்டங்களிலும் எனக்குப் பொறாமை வருமளவுக்கு அவருக்குக் காதலிகள் எக்கச்சக்கம்.

நான் அந்த வீட்டிலிருந்து இடம்பெயர்ந்த காலத்தில் அவரைக் காணக்கிடைக்கவில்லை. இது நடந்து 10 12 வருடங்களுக்கு மேலிருக்கும்.

புதினாத் தேநீரை உறுஞ்சிக்கொண்டிருந்தபோது முன்னாலிருந்தவரின் முதுகுப்புறம் 'எங்கேயோ கண்ட மனிதர்' என்ற உணர்வைத் தந்தது. அவர் திரும்பியபோது அடையாளம் கண்டுகொண்டேன். எழுந்து "என்னை நினைவிருக்கிறதா" என்றபோது அவர் தடுமாறினார். நாம் வாழ்ந்திருந்த விலாசத்தைக் கூறி அறிமுகப்படுத்திக்கொண்டேன்.

அவருக்கு இப்போது முன்பிருந்த திடகாத்திரமான உடலில்லை. உரையாடவே சிரமப்பட்டார்.

சில காலங்களுக்கு முன்னதாக ஒரு நாள் தான் மயங்கி விழுந்தாதகவும் வைத்தியசாலையில் அவரது இதயத்திற்கு அருகில் மோசமான கிருமித்தொற்று இருப்பதாகக் கண்டறிந்து அப்பகுதியை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்ற வேண்டும் அல்லது உயிருக்கு ஆபத்து என்றிருக்கிறார்கள். அதற்கு இன்னொருவரின் இதயத்திலிருந்து குறிப்பிட்ட பகுதியின்றி அந்த



அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது என்ற நிலையேற்பட்டிருக்கிறது.

ஒரு விபத்தில் காலமான 23 வயதுடைய சுவீடன் இளைஞர் ஒருவரது இதயம் கிடைத் திருக்கிறது. உடன் வரவும் என்ற செய்தி கிடைத்தவுடன் வைத்தியசாலைக்குச் சென்றிருக்கிறார்.

அவர் வைத்தியாசாலைக்குள் நுழைந்தபோது ஒரு உலங்குவானூர்தி மாற்று இதயத்துடன் வைத்தியசாலையின் வானூர்தி இறங்கு தளத்தில் இறங்கியிருக்கிறது. "எனக்கான இதயத்தின் பகுதிகளை ஒருவர் எடுத்து வருவதைச் சத்திர சிகிச்சைக் கூடத்தின் சாளரத்தின் ஊடாகக் கண்டேன்" என்றார்.

சத்திரசிகிச்சை முடிந்து நான்கு மாதங்களின் பின் இப்போதுதான் வெளியே நடமாடுகிறாராம். உடலில் பெருத்த முன்னேற்றம் இருக்கிறது. குறைந்தது ஒரு வருடம் எடுக்கும் என்றிருக்கிறார் வைத்தியர். வாழ்க்கையை நகர்த்திச் செல்ல பெரும்பாடுபடுகிறேன்"

"நான் எம்போதும் நன்மைச் சங்கிலியில் நம்பிக்கை கொண்டவன்" என்றேன்

"புரியவிலலையே"

"அவசரகால வண்டியில் பணிபுரிந்தபோது எத்தனைஉயிர்களைக் காப்பாற்றியிருப்பீர்கள், உடலுறுப்பு மாற்றும் சத்திரை சிகிச்சை நிலையத்தில் எத்தனை பேருக்கு புதியதொரு வாழ்க்கையைக் கொடுத்திருப்பீர்கள். அவற்றின் நன்மைச் சங்கிலிதான் உங்களைத் தொடர்ந்து வருகிறது" என்றேன்.

"என்னுடன் பழகியவர்கள் யாரும் என்னுடனில்லை இப்போது. மிகவும் பலவீனமாகிவிட்டேன். வைத்தியசாலையும் வீடுமாகப் போகிறது காலம்" என்று கலங்கினார். அவரது கைகளைப் பற்றிக்கொண்டேன். சற்றுநேரம் நாம் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

"நீ சொன்ன வார்த்தைகள் எனக்கு பெரும் ஆறுதலாக இருக்கின்றன. இதுவரை எனது பாவங்களே என்னைத் தொடர்கின்றனஎன்று நம்பியிருந்தேன். மனதுக்கு மிகுந்த நம்பிக்கையைத் தந்திருக்கிறன்றன உனது வார்த்தைகள்"

"பாவங்களுக்கு தண்டனை இருக்கிறதோ இல்லையோ நான் அறியேன். ஆனால், இன்னொரு மனிதன் மேல் அன்பு கருணை செலுத்துவது மட்டுமின்றி எம்மாலான உதவிகளைச் செய்வதன் பலன் உங்களை எதிர்பாராத பொழுதில் வந்தடையும் என்று காலம் கற்றுத் தந்திருக்கிறது என்றேன்".

ஒளிர்ந்த கண்களுடன் எழுந்துவந்து "சத்திர சிகிச்சையை விட வார்த்தைகளுக்கு வீரியம் அதிகம் என்பதைப் புரிந்துகொண்டேன்" என்று கூறி இறுகத் தோளணைத்தார். வெளியே பனியும் காற்றும் நின்றுவிட்டிருந்தன.



# நடுக்கடலில் ஒரு 'குப்பை' நகரம்

## பிளாஸ்டிக்கில் குடியேறிய கடல் உயிரினங்கள்!

பசிபிக் பெருங்கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் கடற்கரை உயிரினங்கள் குடியேறி, புதியதொரு சுற்றுச் சூழலை புதிய சுற்றுச்சூழலை உருவாக்கியுள்ள நிகழ்வு உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலகளவில் பிளாஸ்டிக் பயன்பாடு என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சில நாடுகள் இந்த பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்தாலும், பல நாட்டுகளில் முக் கிய பயன்பாட்டு பொருளாக பிளாஸ்டிக் உருவெடுத் துள்ளது.

'பயன்படுத்திவிட்டு வீசப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது குறித்து உலக சுகாதார மையம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் நிலையில், தற்போது பிளாஸ் டிக் கழிவுகளால் கடலில் புதிய சூழல் உருவாகி யுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

நடுக்கடல் என்றாலே மனித நடமாட்டம் இல் லாத, ஆழமான, அமைதியான பகுதி என்றுதான் நாம் நினைப்போம். ஆனால், கரையில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி, பசிபிக் பெருங்கடலின் இதயப்பகுதியில் புதிய அதிர்ச்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாம் தூக்கி எறிந்த பிளாஸ்டிக் குப்பைகள், இன்று கோடிக் கணக்கான கடல் உயிரினங்களின் அழிவுகரமாக மாறியுள்ளன.

'பசிபிக் கழிவு மண்டலம்' (Great Pacific Garbage Patch) என்றழைக்கப்படும் இப்பகுதி, பல லட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கிக் கிடக்கும் இடமாகும். இதுவரை இது சுற்றுச்சூழல் சாபக்கேடாகவே பார்க்கப்பட்டது.

ஆனால், சமீபத்திய ஆய்வு ஒன்று ஒருவியப்பூட் டும் உண் மையை சொல்கிறது: கடற்கரையோரம் மட்டுமே வாழக்கூடிய நண்டுகள், கடல் சாமந் திகள் மற்றும் சிப்பிகள், இப்போது இந்த மிதக்கும் பிளாஸ்டிக் குப்பைகளில் தங்களது காலனிகளை அமைத்து வருகின்றன.

கடலில் இருந்து எடுக்கப்பட்ட 105 பிளாஸ்டிக் பொருட்களை ஆய்வு செய்ததில், 98% பொருட் களில் உயிரினங்கள் ஒட்டிக்கொண்டு வாழ்வது தெரிந்தது. இவை அங்கே தங்கி வாழ்வது மட்டுமல்லாமல், முட்டையிட்டு இனப்பெருக்கமும்



செய்கின்றன. பிளாஸ்டிக் கயிறுகளில் முட்டைகள் உடன் இருக்கும் பெண் உயிரினங்களையும், குஞ்சுகளையும் விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர். 2011 ஜப்பான் சுனாமியின் போது கடலில் கலந்த அதே வகை உயிரினங்கள், இன்றும் அந்தப் பிளாஸ்டிக் கழிவுகளில் செழிப்பாக வளர்ந்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயற்கையான மரக்கட்டைகள் அல்லது கடல்



பாசிகள் கடலில் விரைவில் அழுகிவிடும். ஆனால், பிளாஸ்டிக் அழியாது. இந்த 'மரண மில்லா' தன்மைதான் உயிரினங்களுக்கு சாதக மாகிவிட்டது.

பல ஆண்டுகளாகச் சிதையாமல் மிதக்கும் பிளாஸ்டிக் கயிறுகள் மற்றும் வலைகள், இந்த உயிரினங்களுக்கு தலைமுறை தலைமுறையாகத் தங்கும் ஒரு நிரந்தர வீட்டை வழங்குகின்றன. விஞ்ஞானிகள் இந்த வினோத சூழலுக்கு 'நியோ பெலாஜிக்' என்று பெயரிட்டுள்ளனர். அதாவது, கடற்கரை உயிரினங்களும், நடுக் கடல் உயிரினங்களும் இணைந்து வாழும் ஒரு புதிய கலப்பு உலகம். ஆய்வு செய்யப்பட்ட 103 பொருட்களில் 70% அதிகமானவற்றில் கடற்கரை உயிரினங்கள் ராஜ்யம் நடத்துகின்றன.

இது பார்ப்பதற்குச் சுவாரசியமாக இருந்தாலும், கடலின் சமநிலையைச் சீர்குலைக்கும் ஒரு பெரிய ஆபத்து ஒளிந்திருக்கிறது.கடற்கரை உயிரினங்கள் நடுக்கடலுக்குவருவது, அங்குள்ள மற்ற உயிரினங்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக் கலாம். 1.8 டிரில்லியன் பிளாஸ்டிக் துகள்கள் கடலில் மிதக்கின்றன. இவை காலப்போக்கில் நுண் பிளாஸ்டிக்காக மாறி உணவுச் சங்கி லிக்குள் நுழையும் அபாயம் உள்ளது.

நாம் தூக்கி எறிந்த ஒரு சாதாரண பிளாஸ்டிக் பாட்டிலோ அல்லது அறுந்த மீன்பிடி வலையோ, இன்று கடலின் நடுவே ஒரு புதிய நகரத்தையே உருவாக்கியிருக்கிறது.

இயற்கையின் தகவமைப்புத் திறன் வியக்க வைத்தாலும், பிளாஸ்டிக் இல்லாத கடலே உண் மையான அழகு என்பதை நாம் மறக்கக் கூடாது.

பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்று உலகளவில் பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வந்தாலும், நாளுக்கு நாள் இதன் பயன்பாடு அதிகரிக்கும் சூழல் தான் உருவாகிறதே தவிர, அதன் பயன்பாட்டை குறைக்கும் சூழல் என்பது குறைவாகத்தான் இருக்கிறதே என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.



# இறந்து மீண்டும் உயிர்பெற்ற கடல்

இந்தக் கேள்விக்கு "முடியாது" என்றுதான் உலகம் சொல்லிக்கொண்டிருந்தது. ஆனால், அந்த வரலாற்றையே மாற்றி எழுதியிருக் கிறது கஜகஸ்தான்.

மனிதனின் பேராசையால் அழிந்து, மீண் டும் மனிதனின் முயற்சியாலேயே உயிர்பெற்ற ஆரல் கடலின் கதை, ஒரு திரில்லர் சினி மாவை விடவும் விறுவிறுப்பானது.

1960களுக்கு முன்பு வரை ஆரல் கடல் உலகின் நான்காவது மிகப்பெரிய ஏரியாக, சுமார் 68,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பிரம்மாண்டமாக இருந்தது. ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கு அதுதான் உலகம். ஆனால், சோவியத் யூனியன் காலத்தில் 'வெள் ளைத் தங்கம்' என்று அழைக்கப்பட்ட பருத்தி சாகுபடியை அதிகரிக்க நினைத்தார்கள்.


அதற்காக, ஆரல் கடலுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்த 'அமு தரியா' மற்றும் 'சிர் தரியா' நதிகளின் போக்கை பாலைவனப் பகுதிகளை நோக்கித் திருப்பினார்கள். அதுதான் அந்தப் பேரழிவின் ஆரம்பம். கடல் மெல்ல மெல்ல வறளத் தொடங்கியது.

தண்ணீர் இருந்த இடத்தில் உப்புப் பாலை வனம் உருவானது. ஒரு காலத்தில் ஆழமான கடற்பகுதியாக இருந்த இடங்களில், துருப்பிடித்த கப்பல்கள் மணலில் அனாதையாக நின்ற காட்சிகள், உலகின் மனசாட்சியை உலுக்கின. துருப்பிடித்த கப்பல்களின் சவக்காடாகத் தோன்றியது ஆரல் கடல்.

காற்றில் பரவிய உப்பு மற்றும் நச்சுப் புழுதியால் அப்பகுதி மக்களுக்குப் பல நோய்கள் வர, அந்த ஊரே அனாதை இல்லம் போலானது.

2000ம் ஆண்டின் தொடக்கத்தில் கடல் தன் பழைய அளவில் வெறும் 10% மட்டுமே எஞ் சியிருந்தது. இனி ஆரல் கடலை மீட்கவே முடியாது என்று விஞ்ஞானிகள் கைவிரித்த போது தான், கஜகஸ்தான் அரசு ஒரு துணிச்சலான முடிவை எடுத்தது.

"முழு கடலையும் காப்பாற்ற முடியாவிட்டாலும், வடக்கே இருக்கும் பகுதியையாவது (North Aral Sea) காப்பாற்றுவோம்" என்று களத்தில்




இறங்கினார்கள்.

உலக வங்கியின் உதவியோடு, 2005ல் 'கோக்அரல்' (Kok-Aral) என்ற 13 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு பிரம்மாண்டமான அணையைக் கடலுக்குக் குறுக்கே கட்டினார்கள்.

வடக்கு ஆரல் கடலுக்கு நீர் கொடுக்கும் ஒரே ஆதாரம் 'சிர் தரியா' (Syr Darya) நதி. இந்த நதி நீர் வீணாக தெற்குப் பகுதி பாலைவனத்திற்குச் சென்று ஆவியாவதைத் தடுக்க, இந்த அணை ஒரு தடுப்புச் சுவராக (Dyke) நின்றது.

தெற்குப் பகுதிக்குத் தண்ணீர் வீணாகச் செல்வதைத் தடுத்து, வடக்குப் பகுதியிலேயே நீரைத் தேக்குவதுதான் திட்டம்.

இயற்கை எப்போதுமே அற்புதமானது. நாம் செய்த தவறைத் திருத்திக்கொண்டு, அதற்கு ஒரு சிறு வாய்ப்பு கொடுத்தால் போதும், அது தன்னைத்தானே குணப்படுத்திக்கொள்ளும். அணை கட்டப்பட்ட பிறகு நடந்ததை ஒரு அதிசயம் என்றே சொல்லலாம்.

விஞ்ஞானிகள் "இந்தக் கடல் நிரம்ப குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகும்" என்று கணித்தார்கள். ஆனால், வெறும் 7 மாதங்களில் கடல் நீர்மட்டம் 38 மீட்டரில் இருந்து 42 மீட்டராகக் கிடுகிடுவென்று உயர்ந்தது! ஒரு லிட்டர் நீரில் 30 கிராமாக இருந்த உப்புத்தன்மை, 8 கிராமாக குறைந்து, மீண்டும் மீன்கள் துள்ளிக் குதிக்கத் தொடங்கின.

இன்று நிலைமை தலைகீழ்.

பாலைவனமாகிப் போன தங்கள் ஊருக்கு மீனவர்கள் மீண்டும் திரும்பியிருக்கிறார்கள். 2006ல் வெறும் 1,360 டன்னாக இருந்த மீன் பிடிப்பு, 2016ல் 7,000 டன்னாக உயர்ந்திருக்கிறது. இன்று இங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த வெற்றிக்கு ஒரு மறுபக்கமும் உண்டு. வடக்கு ஆரலைக் காப்பாற்ற, தெற்கு ஆரல் கடலுக்கான நீர்வரத்து முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. தெற்குப் பகுதி இன்று கிட்டத்தட்ட செத்துவிட்டது என்றே சொல்லலாம்.

"ஒரு கண்ணைக் காப்பாற்ற, இன்னொரு கண்ணை இழந்த கதை" இது.

தெற்கு ஆரல் கடல் இன்னும் வறண்டுதான் கிடக்கிறது என்றாலும், வடக்கு ஆரல் கடலின் இந்த உயிர்த்தெழுதல் நமக்குச் சொல்லும் பாடம் ஒன்றுதான்: மனிதன் நினைத்தால் இயற்கையை அழிக்கவும் முடியும், அதே மனிதன் மனது வைத்தால், அழிவின் விளிம்பில் இருந்ததைக் கூட மீட்டெடுக்க முடியும்.

நம்பிக்கை இழக்காதீர்கள், மாற்றம் சாத்தியமே என்பதற்கு ஆரல் கடலே சாட்சி!



# உலகிற்கு தன்னிறைவு வாழ்க்கை முறையை கற்றுக்கொடுத்த

# கோவில்கள்



சோழர் காலத்தில் தமிழ்நாடு தான் உலகத்திலேயே மிகவும் பணக்கார நாடு... சுமார் 40,000 கோயில்களை சோழர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் கட்டினார்கள்...

அன்று உலகிலேயே உயர்ந்த கட்டிடம் தஞ்சை பெரிய கோவிலும், கங்கை கொண்ட சோழபுரமும்தான்...

அப்போது வட அமெரிக்கா, தென் அமெரிக்கா கிடையாது. இலண்டன் ஒரு சிறு மீன் பிடிக்கும் கிராமமாக 1066–இல் நிறுவப்பட்டது.

தஞ்சை பெரிய கோபுரம் முழுவதும் தங்கத்தால் போர்த்தப்பட்டது. இது பற்றிக் கல் வெட்டும் உள்ளது. இந்தத் தங்கப் போர்வை 1311 ஆம் வருடம் மாலிக்கபூரின் படைகளால் கொள்ளையடிக்கப்பட்டு, 500 யானைகள் மேல் எடுத்துச் செல்லப்பட்டது.



இவ்வளவு கோவில்கள் கட்டுவதற்கு எங்கிருந்து பணம் வந்தது?

எல்லாம் கடல் வாணிபம் ஏற்றுமதிதான். ஜப்பான் நாட்டில் தங்கச் சுரங்கம் கிடையாது. ஆனால் ஏற்றுமதி வியாபாரம் மூலம் அவர்களுக்குத் தங்கம் கிடைக்கிறது. அதே போல் சோழ நாட்டில் தங்கச் சுரங்கம் கிடையாது. இரும்பு சாமான்கள், துணிகள், கைவினைப் பொருட்கள், தானிய ஏற்றுமதி மூலம் தங்கம் கிடைத்தது.

உலகிலேயே ஒரே சீராக 80 இலட்சம் ஏக்கர் விளை நிலம் காவிரிப் படுகைப் பகுதியில் தான் அமைந்துள்ளது. எங்கும் மூன்று போகச் சாகுபடிக்குக் காவிரியில் நீர் வந்து கொண்டிருந் தது.

வியாபாரத்திலும், ஏற்றுமதியிலும், விவசாயத்திலும் கிடைத்த பணத்தை தங்கத்தை சோழர்கள் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ள பயன்படுத்தினர்.

மலேயா காடுகளிலிருந்தும், மைசூர் காடுகளிலிருந்தும் யானைகள் பிடித்து வரப்பட்டன.

பர்மாவிலிருந்து தங்கம் கொடுத்து குதிரைகள் வாங்கப்பட்டன.

ஏன் கோவிலை கட்டினார்கள்?

ஹிந்துக்கள் ஏன், கோயில் கோயில் என்று அதைச் சுற்றியே வருகிறோம் ???

பாரதத்தை ஆண்ட பெரும்பாலான அரசர்கள் அவரவர் ஆண்ட பொழுது ஏன் மருத்துவமனை கட்டவில்லை, கல்விச்சாலை அமைக்கவில்லை ஆனால் கோயில்களை கட்டினார்கள்.

கோயில்கள் எப்பொழுதெல்லாம் கட்டப்பட்டன?

மக்களுக்கு பிரித்து கொடுக்காமல், அரசன், அரசின் நிலங்களை, ஏன் கோயில்களுக்கு மானியமாக எழுதி வைத்தான்?

உலகின் குருவாக பாரதம் ஆனது எப்படி?

எந்த ஒரு அரசும் பட்ஜட் போடும் பொழுது வரி வசூல் என்ன, அதில் அரசு நடத்த அதிகாரிகளுக்கு ஆகும் செலவு, மக்கள் நல திட்டங்களுக்கு ஆகும் செலவுன்னு வரவு செலவை வைத்து தன்னிறைவு திட்டத்தை அடையத்தான் பட்ஜட் போடுவார்கள்.

இதையேதான் ஹிந்து கோயில்கள் செய்தன.

கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் ன்னு அதைத்தான் சொல்லி வெச்சாங்க.

மன்னன் கோயில் கட்ட ஆரம்பித்தவுடன், கட்டுமான பணிக்கு அந்த ஊரை சுற்றி உள்ள கட்டுமான கலைஞர்கள், சிற்ப கலைஞர்கள், கல் தச்சர்கள், கட்டுமான பொருட்களான செங்கல், சுண்ணாம்பு போன்றவற்றை உற்பத்தி செய்வோர், அதை ஓரிடத்தில் இருந்து கோயில் கட்டும் இடத்திற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து, வர்ணம் அடிக்க, ஓவிய கலைஞர்கள், இப்படி அனைவருக்கும் வேலை வாய்ப்பு, அதுவும் அரசரால் கொடுக்கப்படும், அரசு வேலை.

கோவிலுக்கு மானியமாக கொடுக்கப்படும் நிலங்கள், குத்தகை மூலமாக விவசாயிகளுக்கு விடப்பட்டு அதன் மூலம் விவசாய உற்பத்தி,




அதற்கு ஒரு சமூகம், பாண்ட மாற்று முறையில், தன்னிறைவு பெற்ற பொருளாதாரம்.*

கோவிலுக்கு கொடுக்கப்பட்ட பசுமாடுகள், அதை கவனித்தல், அதற்கு ஒரு சமூகம், இதனால் கோயிலுக்கும் அந்த கிராமத்தாருக்கும் பால் சார்ந்த பொருட்கள்.

நெய்வேத்தியம் சமைக்க சமையல் கலைஞர்கள். அதற்கு ஒரு சமூகம்.

சமையல் செய்ய பாத்திரங்கள் செய்ய மண் பானை செய்வோர் மற்றும் உலோக பாத்திரம் செய்வோர், அதற்கு ஒரு சமூகம். அவர்களுக்கு தொடர்ந்து வேலை.

நந்தவனம் மூலம் தெய்வத்திற்கு பூ மாலை மற்றும் அலங்கார சேவை செய்ய நந்தவனம் காப்போருக்கு வேலை. அதற்கு ஒரு சமூகம். அவருக்கு தொடர்ந்து வேலை இருக்க, அதற்கேற்ப கோவில் உற்சவங்கள்.

மங்கள இசை இசைக்கும் கலைஞர்கள் ஓர் சமூகம். கூத்து கலைஞர்கள் என,

அவர்களுக்கும் வருட மானியம் மற்றும் வேலை. மாலை வேளைகளில் ஆன்மீக கச்சேரி என்று மனதிற்கு இனிய பொழுது போக்கு நிகழ்ச்சிகள்.

தெய்வத்தின் வஸ்திரங்கள் நெய்ய ஒரு சமூகம்.

அந்த வஸ்திரங்களை துவைக்க ஒரு சமூகம், அவருக்கும் தொடர்ந்து கோவில் மானியம் மூலம் வேலை.

கோயிலை சுத்தமாக வைத்துக்கொள்ள ஒரு தேவை, அதை செய்ய ஒரு சமூகம். அவருக்கும் கோயில் மூலம் மானியம், வருட வருமானம்.

இவை அனைத்தையும் நிர்வாகம் செய்ய, கணக்கு பார்க்க, ஒரு சமூகம்.

இவர்கள் அனைவரும் அவரவர் வேலையை பார்க்க, அதன் மூலம் வாழ்வாதாரம் பெறவும், கோயில் ஒரு மிகப்பெரிய தொழிற்சாலை. ஆன்மீகம் ஒட்டி வாழ்வாதாரம்.

பெரு வெள்ளம் வந்து ஊரே மூழ்கி போனாலும், கோயிலின் கோபுரத்தில், கலசம் மூலம், செறிந்த விஞ்ஞான அறிவுடன், அதனுள் 12 வருடம் வரை கெடாத அந்த கிராமத்தில் மண்ணுக்கேற்ப விளையும் விளை பொருட்களின்



விதை பொருட்கள்.

12 வருடத்திற்கு ஒரு முறை அதை மாற்றி அமைத்து, மராமத்து பணிகள் மேற்கொள்ள மேற் சொன்ன அனைவருக்கும் ஒரு கூட்டு வேலை வாய்ப்பு.

இப்படி அவர் அவருக்கு தெரிந்த பணி, அதை சார்ந்த சமூகம், ஒன்றிணைந்து தன்னையும் காப்பாற்றிக்கொண்டு, தன்னிறைவு வாழ்க்கை என வாழ்வதற்கு கட்டமைக்கப்பட்டதே, நம் ஹிந்து கோயில்கள்.

ஊருக்கு ஒரு கோயில், அதை சுற்றிலும் அனைத்து சமூகம்,

அந்த அந்த ஊரை சுற்றி உள்ள இயற்கை வளங்கள் பாதுகாக்கபட்டு, மூலிகை மூலம் வைத்தியம், அதற்க்கென ஒரு சமூகம் என, ஊரை சுற்றியே, ஓர் தன்னிறைவு வாழ்க்கை.

இப்படி அமைக்கப்பட்டது தான் நம் பொருளாதார கட்டமைப்பு.

மாத சம்பளம் பணமாக, பணத்திற்கு பொருள், அதன்விலை ஏற்ற இறக்கம், பண வீக்கம், இவை எதுவுமே சாராமல் ஓர் தன்னிறைவு வாழ்க்கை.

இதை உடைக்கத்தான், கோயில்கள் தகர்க்கப்பட்டன. இதை தகர்க்கத்தான் கோயிலின் மேல் மாற்று மத படையெடுப்பு நடந்தது.

கோயில்கள் இல்லாமல் போனால் வாழ்வாதாரம் கெடும் என அந்நிய சக்திகள் அறிந்திருந்தனர்.

தெய்வங்களுக்கு உயிரூட்டி, அந்த தெய்வங்கள் அங்கே வாழ்வதாகவும், அந்த கோயிலின் சொத்துக்கள், அந்த தெய்வங்களின் சொத்துக்கள் என்றும்,

எப்படி, உயிருள்ள ஒருவரின் சொத்தை அவர் சம்மதம் இல்லாமல் மற்றவர் அபகரித்து கொண்டாலும், அது அபகரித்தவரின் சொத்து ஆகாதோ, அதே போல, அனைத்து கோயிலின் சொத்துக்களும், அந்த கோயிலில் வாழும் அந்த தெய்வத்திற்கே சொந்தம் என்று காலம் காலமாக நமது சனாதன தர்மத்தில் இருக்கும் நம்பிக்கையும் வகுக்கப்பட்ட கொள்கையும்.

உயிருள்ள ஒருவர், எப்படி தினமும் குளிப்பாரோ, உடை உடுத்தி கொள்வாரோ, தினமும் உணவு உண்பாரோ, நம் வாழ்வாதாரத்திற்கு உதவும் ஒருவரை நாம் எப்படி போற்றி கவனிப்போமோ, அப்படி அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக, அனைவரின் சார்பாக, பூஜைகளை கவனிக்க ஒரு சமூகம்.

இப்படி ஒரு கோயிலை வைத்து, ஆன்மீகம் மூலமாக ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தை உலகிற்கு வாழ்ந்து காட்டியதாலேயே, பாரதம் உலக குருவாக திகழ்ந்தது.




## இரண்டாம் உலகப்போருக்கு பின்

# சீனாவில் ஏற்பட்ட மிகப்பெரிய எழுச்சி


இரண்டாவது உலகப்போர் முடிஞ்சு, ஜப்பான் காரன் வெளியேறுனதுக்கு அப்புறம் சீனாவுல நிலைமை உடனே சரியாயிடல, அதுக்கப் புறம் ஒரு பெரிய உள்நாட்டுப் போரே நடந்துச்சு. கடைசியில 1949ல மாவோ சேதுங் தலைமையில கம்யூனிஸ்ட் ஆட்சி வந்தப்போதான் சீனா ஒரு புது பாதையில நடக்க ஆரம்பிச்சது.

ஆரம்பத்துல ரொம்ப வறுமையில இருந்த சீனா, 1970களோட கடைசியில டெங்சியாவோ பிங் கொண்டு வந்த பொருளாதார சீர்திருத்தங் களாலதான் அசுர வேகத்துல வளர ஆரம்பிச்சது.

உலகத்துக்கே ஒரு பெரிய தொழிற்சாலையா மாறி, வெளிநாட்டு கம்பெனிகளை எல்லாம் உள்ள விட்டு, அவங்க ஊர் உற்பத்தி திறனை பயங்கரமா ஏத்துனாங்க.

அந்த மஞ்சள் ஆத்து பேரழிவை எல்லாம் பார்த்த சீனா, அதுக்கப்புறம் அணைகட்டுறதுலயும், வெள்ளத்தை தடுக்கிற தொழில்நுட்பத்துலயும் உலகத்துக்கே சவால் விடுற அளவுக்கு முன்னேறி டுச்சு. இன்னிக்கு உலகத்தோட ரெண்டாவது பெரிய பொருளாதார நாடா நிக்குறதுக்கு பின்னால, கோடிக்கணக்கான மக்களோட உழைப்பும், பழைய கசப்பான பாடங்களும் தான் காரணமா இருக்கு.

இந்த திரீ ஜார்ஜஸ் அணை (Three Gorges Dam) இது உலகத்திலேயே மிகப்பெரிய மின்சார



உற்பத்தி நிலையமா நிக்குது. 1938ல மஞ்சள் ஆத்துல நடந்த அந்த கோரமான வெள்ளம் கொடுத்த பாடத்தை மனசுல வச்சுக்கிட்டு, யாங்ஸி ஆத்துல வர்ற வெள்ளத்தை கட்டுப்படுத்தவும், நாட்டுக்கு தேவையான கரண்டை அள்ளவும் சீனா போட்ட ஒரு மெகா பிளான் தான் இது.

இந்த அணையை கட்டி முடிக்க கிட்டத்தட்ட 18 வருஷம் ஆச்சு, இதுக்காக பல லட்சம் மக்களை வேற இடத்துக்கு மாத்துனாங்க, பல வரலாற்று சின்னங்கள் கூட தண்ணிக்குள்ள மூழ்கிடுச்சு.

ஆனா, இந்த ஒரு அணை மட்டும் கிட்டத்தட்ட 22,500 மெகாவாட் கரண்டை உற்பத்தி பண்ணுதுன்னா பார்த்துக்கோங்களேன், இது பல நாடுகள் உற்பத்தி பண்ற மொத்த கரண்டை விட அதிகம்! இந்த அணை எவ்வளவு பெருசுன்னா,

இதுல தேக்கி வைக்கப்பட்டு இருக்குற தண்ணியோட எடை காரணமா பூமியோட சுழற்சி வேகமே ஒரு ஒரு செகண்ட்ல ஒரு சின்ன பங்கு குறைஞ்சிருக்குன்னு விஞ்ஞானிகள் சொல்றாங்க.

சீனா இன்னிக்கு உலகத்துக்கே ராஜாவா இருக்குறதுக்கு, இப்படிப்பட்ட பிரம்மாண்டமான கட்டுமானங்களும், எதையும் துணிஞ்சு செய்ற அவங்க புத்தியும்தான் முக்கியமான காரணம்.

சீனாக்காரங்க அணை கட்டுறதுல மட்டும் இல்ல, இந்த பாலம், ரோடு போடுறதுலயும் உலகத்தையே வாயடைக்க வச்சுருக்காங்க, அதுக்கு ஒரு பெரிய உதாரணம் தான் ஹாங்காங் சுஹாய்மக்காவ் (Hong Kong-Zhuhai-Macao Bridge) பாலம்.

இது சும்மா, கடலுக்கு நடுவுல சுமார் 55 கிலோமீட்டர் தூரத்துக்கு நீண்டு போற உலகத்தோட மிக நீளமான கடல் பாலம் இது, இதுல ஒரு ஸ்பெஷல் என்னன்னா கடலுக்கு அடியில ஒரு பெரிய சுரங்கப்பாதையையும் வச்சு அமைச்சிருக்காங்க.

இந்த பாலத்தை கட்டுறதுக்கு அவங்க பயன்படுத்தின இரும்பை வச்சு 60 ஈபிள் டவரை கட்டிடலாம்னா பாத்துக்கோங்களேன், அந்த அளவுக்கு பிரம்மாண்டம்

அதே மாதிரி திபெத் மலைப்பகுதியில உலகத்துலயே மிக உயரமான இடத்துல ரயில் பாதையை அமைச்சிருக்காங்க, அங்க காத்து ரொம்ப கம்மியா இருக்கும்ன்றதுனால ரயிலுக்குள்ளேயே ஆக்சிஜன் சிலிண்டர் வசதி எல்லாம் செஞ்சு வச்சிருக்காங்க.

மலைகளை குடைஞ்சு கிலோமீட்டர் கணக்குல சுரங்கப்பாதைகளை போட்டு, போக்கு வரத்துக்கே லாயக்கில்லாத இடங்களை கூட இன்னைக்கு சீனா ஒரு சூப்பர் ஹைவேயா மாத்தி வச்சிருக்கு, இதெல்லாம் பார்க்கும்போது அவங்க முன்னேற்றம் எவ்வளவு வேகமா இருக்குன்னு புரியுது.

# வீட்டை விற்றுவிட்டு.. அதே வீட்டில் 7 ஆண்டுகள் வாழ்ந்த கில்லாடி பெண்!

சீனாவில் தன்னுடைய வீட்டை புது ஓனருக்கு விற்ற பெண், புது உரிமையாளருக்கு தெரியாமல் 7 ஆண்டுகளாக அதே வீட்டில் வசித்து வந்தது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஜிங்சு மாகாணத்தை சேர்ந்தவர் ஜாங் எனும் பெண்மணி. இவர் கடந்த 2016ம் ஆண்டு தான் குடியிருந்த வீட்டை விற்பதாக அறிவித்தார். சிலர் வீட்டை வாங்க முன்வந்தனர். ஆனால் விலை கட்டுபடியாகவில்லை.

சரியான விலைக்காக ஜாங் காத்திருந்தார். கடைசியாக 2019ம் ஆண்டு லீ என்பவருக்கு வீடு மிகவும் பிடித்துப்போய்விட்டது. பங்களா மாதிரி வீடு.. தோட்டம், மரங்கள், காற்றோட்டமான இயற்கை எழில் கொஞ்சும் வசதியுடன் இருப்பதால், வீட்டை ரூ.2.24 கோடி கொடுத்து வாங்கிக்கொள்வதாக கூறினார்.

பத்திரப்பதிவும் செய்யப்பட்டு அதேஆண்டில் வீடு லீ கைக்கு மாறியது. லீ பரபரப்பான பிசினஸ் மேன். வீட்டில் இருக்கும்நேரம்குறைவுதான். எப்போதும் வேலை, வேலை என்று ஓடிக்கொண் டிருப்பார். பெரும்பாலும் விடுமுறையில்தான் வீட்டில் அதிக நேரத்தை கழிப்பார்.

இப்படியே 7 ஆண்டுகள் ஓடிவிட்டது. ஆனால் இவர் குடியிருக்கும் வீட்டில் இவருக்கே தெரியாமல் வேறு யாரோ இருப்பது போன்று அடிக்கடி தோன்றியிருக்கிறது.

வித்தியாசமான சத்தங்கள், திடீர் வெளிச்சம் என அமானுஷ்யமாக நடந்திருக்கிறது...

பேய் எதாவது இருக்கும் என்று யோசித்த லீ, அதை ஓட்டுவதற்கு சில விஷயங்களையும் செய்திருக்கிறார். ஆனால் கொஞ்ச நாட்கள் கழித்து மீண்டும் இதே பிரச்சனை.

அவருடைய உள்ளுணர்வு, அவரை தவிர இங்கு வேறு யாரோ இருப்பதாக சொல்லிக்கொண்டே இருந்தது. இப்படி இருக்கையில்தான் ஒரு நாள் வீட்டை சுத்தம் செய்யலாம் என்று முடிவெடுத்து வேலையில் இறங்கியிருக்கிறார்.

தோட்டம் பக்கம் அங்கு ஒரு கழிவறை இருந்திருக்கிறது. இதுவரை அவர் அதை பயன் படுத்தியதில்லை. ஆனால் அதை சுத்தம் செய்து வைத்தால், நண்பர்கள் யாராவது வந்தால் பயன் படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும் என்று யோசித்து கிளீன் செய்ய கழிவறை கதவை திறந்திருக்கிறார். அங்குதான் ஒரு ட்விஸ்ட் காத்திருந்திருக்கிறது.

தோட்டத்தில் இருந்தது உண்மையானகழி வறை கிடையாது. கதவுக்கு பின் ஒருபடிக்கட்டு செல்கிறது. இதை கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. மனதில் பயம்ஒருபக் கம், மறுபுறம் இந்த படிக்கட்டு எங்கு போகிறது என்கிற கேள்வியும் இருந்தது. மனதை திடப்படுத்திக்கொண்டு படிக் கட்டில் இறங்கியிருக்கிறார்.




அது ஒரு அறைக்கு அழைத்து சென்றது. அந்த அறை விசாலமாக, ஒரு ஆள் வசிப்பதற்கு ஏற்றார் போல இருந்திருக்கிறது. காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்திற்கான வசதியும் அங்கு செய்யப்பட்டிருக்கிறது. அறையை முழுமையாக சோதனையிட்டதில் மற்றொரு மூலையில் இந்த வீட்டின் பழைய ஓனர் ஜாங் இருந்திருக்கிறார்.

இரண்டு பேரும் ஒருவரை பார்த்து ஒருவர் கத்த.. அந்த தெருவே அமர்க்களமாகியிருக்கிறது. லீ உடனடியாக ஜாங்கை வெளியே போக சொல்லியிருக்கிறார். ஆனால், வீட்டை விற்ற பத்திரத்தில் இந்த பேஸ்மென்ட் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றும், எனவே இது எனக்கு சொந்தமானது என்றும் ஜாங் வெளியே போக மறுத்திருக்கறார். விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறது. அங்கு நீதிபதி, லீக்கு ஆதர வாக தீர்ப்பளித்து, ஜாங் இத்தனை நாள் இங்கு தங்கியதற்கு அபராதம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.



# 77,000 கோடி சொத்துக்கு வாரிசு! உபாசனாவின் சொத்து மதிப்பு

தென்னிந்திய சினிமாவின் முக்கிய நடிகராக இருப்பவர் சிரஞ்சீவி. இவரது மகன் ராம் சரண், பெரிய குடும்பத்து பெண்ணான உபாசனாவை திருமணம் செய்தார்.

இவர்களுக்கு, இரண்டாவதாகவும் டவின்ஸ் குழந்தைகள்தான். இந்த சமயத்தில், உபாசனாவின் சொத்து மதிப்பு குறித்த தகவல் இணையத்தில் வெளியாகி இருக்கிறது.

'ராம் சரணின் மனைவி, பெரிய குடும்பத்து வாரிசு' என சொல்வதை காட்டிலும், உபாசனாவை 'இந்தியாவின் சிறந்த தொழிலதிபர்' என்றே சொல்ல வேண்டும். இந்தியாவின் பணக்கார மற்றும் சக்தி வாய்ந்த பெண் தொழிலதிபர்களுள் ஒருவராக இருக்கும் உபாசனா, இந்தியாவின் ஹெல்த்கேர் துறையில் முக்கிய பங்காற்றுபவராக இருக்கிறார். இவர், சொந்தமாக B - Positive என்கிற ஒரு பத்திரிகையையும் வைத்து நடத்தி வருகிறார். பெண்கள் முன்னேற்றத்தை பற்றி எங்கு சென்றாலும் பேசி வரும் அவர், தனது குடும்பத்தின் பெயரையும் ஒரு பக்கம் தனது திறன் வாய்ந்த தலைமைத்துவத்தை நிலைநாட்டி வருகிறார்.

ராம் சரணின் மனைவி உபாசனா காமினேன், அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் சி.ரெட்டியின் பேத்தி ஆவார். இதனால், இவரும் அப்போலோ மருத்துவமனை நிறுவனத்தின் தலைவர்களுள் ஒருவாராக விளங்குகிறார். அப்போலோ குழுமத்தின் தலைவருக்கு மொத்தம் 77,000 கோடிக்கும் மேல் சொத்து இருக்கிறதாம் இந்த சாம்ராஜ்ஜியத்தின் வாரிசாகவும் இவர் விளங்குகிறார்.

நடிகர் ராம் சரணுக்கும், உபாசனாவிற்கும் கடந்த 2012ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. ராம் சரண், தெலுங்கு திரையுலகில் 'மெகா ஸ்டார்' ஆக விளங்கும் சிரஞ்சீவியின் மகன் ஆவார். சிறு வயது நண்பர்களான ராம் சரணும் உபாசனாவும், பின்னர் தனித்தனியே தங்களின்





வாழ்க்கையை பார்க்க தொடங்கினர். ஆனால், கல்லூரி படிக்கும் சமயத்தில் இருவருக்கும் மீண்டும் நேசம் தொடங்கியது. இதையடுத்து இருவரும் காதலித்து வந்தனர். இதையடுத்து இவர்களின் காதல் திருமணம் முடிந்தது.

சிரஞ்சீவியின் குடும்பமும், இந்தியாவின் பணக்கார சினிமா குடும்பங்களுள் ஒன்றாகும். இந்த குடும்பத்தை சேர்ந்தவர்கள், வெறும் சினிமாவில் நடிப்பதில் இருந்து சம்பாதிப்பது மட்டும் இல்லாமல் நிறைய முதலீடுகளும் செய்து வருகின்றனர். இவர்களின் சொத்து மதிப்பு மட்டுமே, சுமார் ரூ.1650 கோடிக்கு மேல் தாண்டும் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதைத்தாண்டி, இவர்களுக்கென்று தனி பங்களாக்கள், விலை உயர்ந்த கார்கள் என்று பல கோடி மதிப்புடைய பல சொத்துகளையும் வைத்துள்ளனர்.

உபாசனாவும், தனக்கென தனி சொத்தாக சுமார் ரூ.1,130 கோடி சொத்து வைத்திருப்பதாக கூறப்படுகிறது. பெரிய தொழில் குடும்பத்தின் வாரிசான இவர், சமீபத்தில் தனது செயலால் செய்தித்தாளின் தலையங்கமாக வந்தார். உபாசனா அண்மையில் ஒரு கல்லூரி நிகழ்ச்சிக்கு சென்றிருந்ததை தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

அதில் "அண்மையில் நான் மிமிஜி ஹைதராபாத் கல்லூரி நிகழ்ச்சிக்கு சென்று இருந்தேன். அப்போது யார் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள் என்று கேட்டபோது பெண்களை விட அதிகமான ஆண்கள் கைகளை உயர்த்தினர்.

ஆனால் மாணவிகளுடன் உரையாடியபோது திருமணத்திற்கு முன்னர் நிதி ரீதியாக தாங்கள் ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும், நிதி ரீதியான சுதந்திரம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என விரும்புகின்றனர் இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது" எனப் பதிவிட்டிருந்தார்.

இதற்கு பிரபல தொழிலதிபரான ஸ்ரீதர் வேம்பு, 'இளைஞர்கள் தங்கள் 20களில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என ரிப்ளை செய்திருந்தார். இது, சலசலப்பைஏற்படுத்தினாலும், இவரை பல நாட்களாக ட்ரெண்டிங்கிலேயே வைத்திருந்தது.

அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

## அருள்தரும் தெய்வம்

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com










எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

**சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,**

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், **நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,**

**Whatsup no.8122664699**




TamilnaduEpaper.com